... படிப்பகம்
... யாழ்ப்பாணம்.

01 - 18

# Saturday மெயில்

30-01-2010
பக்கங்கள்: 24
விலை: 15/=

සැටඩේ මේල්

A Fascinating Weekly Bulletin

# உலகில் பாவங்கள் மிகுதியான நாடு அவுஸ்திரேலியா!



மனித வாழ்வில் இருக்கக்கூடிய ஏழு பாவங்களைப் பொறுத்தவரை உலகிலேயே மிகவும் கூடுதலான அளவுக்கு பாவமானநாடு அவுஸ்திரேலியா என்று ஆய்வொன்றின் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது.

பி.பி.சி.யின் விஞ்ஞான, தொழில்நுட்ப சஞ்சிகையினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதன் விபரங்கள் அவுஸ்திரேலியாவின் 'Courier Mail' பத்திரிகையில் நேற்றைய தினம் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சிற்றின்ப வேட்கை (Lust), மிதமிஞ்சிய உணவு (Gluttony), சோம்பேறித்தனம் (Sloth), பேராசை (Greed), கோபம் (Wrath), பொறாமை (Eavy) மற்றும் அகம்பாவம் (Pride) ஆகியவையுமே 7 பாவங்களுமாகும். இந்தப் பாவங்களை மிகையாகக் கொண்டிருக்கும் புதிருக்கிடமான 'கௌரவத்தை' அவுஸ்திரேலியா பெற்றிருக்கிறது.

மிதமிஞ்சி உணவு உட்கொள்ளும் பழக்கத்தை பொறுத்தவரை அமெரிக்காவே பட்டியலின் உச்சியில் இருக்கிறது. சிற்றின்ப வேட்கையில் தென்கொரியா முதலிடத்தை வகிக்கிறது. அகம்பாவத்துக்கும் சோம்பேறித்தனத்துக்கும் முதல் தரமான நாடாக ஐஸ்லாந்து திகழ்கிறது.

பேராசையைப் பொறுத்தவரை மெக்சிக்கோவுக்கு முதலிடம் என்று ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.


அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய பலவீனம் பொறாமையாகும். அமெரிக்கா, கனடா, பின்லாந்து மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும்போது பொறாமையைப் பொறுத்தவரை அவுஸ்திரேலியா முன்னணியில் இருப்பது மாத்திரமல்ல, சகலவகையான பாவங்களிலும் கணிப்பீட்டில் கூடுதலான மொத்தப் புள்ளிகளையும் அந்த நாடே பெற்றிருக்கிறது.

நாடுகளில் பரவலாகக் காணப்படுகின்ற தவறான போக்குகளின் அளவைத் தீர்மானிப்பதற்கு வன்முறை மற்றும் குற்றச் செயல்களின் மட்டங்களையே ஆய்வாளர்கள் கணிப்புக்கு உட்படுத்தினார்கள். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு ஆயிரம் பேர் மத்தியிலும் இடம் பெறுகின்ற தாக்குதல், பாலியல் வன்முறை, கொலைகளை ஒப்பிட்டு அவர்கள் பார்த்திருக்கிறார்கள். சோம்பேறித்தனத்தை அளவிடுவதற்கு ஆய்வாளர்கள், தொழிலாளர்கள் வாரத்தில் வேலை செய்யும் நாட்களை அடிப்படையாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அகம்பாவத்தை அவர்கள் அந்தந்த நாடுகளில் செய்யப்படுகின்ற பிளாஸ்டிக் சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கையைக் கொண்டு அளவிட்டிருக்கிறார்கள். ஆபாசப் படங்களைப் பார்ப்பதில் ஆட்கள் செலவிடும் நேரத்தை அடிப்படையாகக் கொண்டு சிற்றின்ப வேட்கையின் மட்டத்தைக் கணிப்பிட்டிருக்கிறார்கள்.

Registered as a Newspaper at G.P.O.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாளைக்கு கறுப்பு ஆடு



பிரபலமானவர்கள் சிலருக்கு விசித்திர பழக்க வழக்கங்கள் இருக்கும். இவ்வாறான பழக்க வழக்கங்கள் சிலவேளைகளில் நகைச்சுவையாகவும் சிலவேளைகளில் ஆபத்தானதாகவும் இருக்கும்.

தற்போது பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, போப் இரண்டாவது ஜோன் போல் ஆகியோரின் விசித்திர பழக்க வழக்கம் தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ளன.

தனக்கு எதிரான தீய சக்திகள் ஒழிய பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி தினசரி ஒரு கறுப்பு ஆடு பலியிடுவதாகத் தெரியவந்துள்ளது. பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் இருந்த போது சர்தாரி உட்பட ஏராளமானோர் மீதான ஊழல் வழக்குகளை திரும்பப் பெறுவதாகக் கூறி அரசு சார்பில் அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது. அதற்கு நீதிமன்றம் அனுமதி அளித்தது. முஷாரப்புக்கும் சர்தாரிக்கும் இடையே ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் அவருக்கு எதிரான ஊழல் வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. இதையடுத்தே வெளிநாட்டில் தஞ்சம் அடைந்திருந்த சர்தாரி பாகிஸ்தானுக்கு திரும்பி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

சர்தாரி என்று ஜனாதிபதி நாற்காலியில் அமர்ந்தாரோ அந்த நாளில் இருந்து தினசரி ஒரு நாள் தவறாமல் கறுப்பு ஆடுகளைப் பலியிட்டு வருவதாகக் கூறப்படுகிறது. கறுப்பு ஆடுகளைப் பலியிட்டால் தன்னைத் தீய சக்திகள் நெருங்காது என்ற ஆழ்ந்த நம்பிக்கையை சர்தாரி கொண்டிருப்பதே அவரது இந்தச் செயலுக்குக் காரணம் என்று அவரது நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கறுப்பு ஆடுகளை வாங்கும் பணியை அவரது தனி உதவியாளர் பாய் கான் மேற்கொண்டு வருகிறார். பாகிஸ்தானில் உள்ள கிராமங்களுக்குச் சென்று கறுப்பு ஆடுகள் எங்கிருந்தாலும் அவற்றைத் தேடிப்பிடித்து வாங்கி வருவதே இவரது முக்கிய பணியாக உள்ளது. கறுப்பு ஆடுகளை வாங்கி வந்து சர்தாரி முன் நிறுத்துவார். சர்தாரி அந்த ஆடுகளை தடவிக் கொடுத்து பலியிடும் கூடத்துக்கு அனுப்பி வைப்பார்.

அவரது கரம் படாமல் எந்த ஒரு ஆடும் பலியிட அனுமதிக்கப்படாது என்றும் அவரது நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

சர்தாரியின் இந்தச் செயலை அவரது செய்தித் தொடர்பாளரான ஃபர்ஹதுல்லாவும் ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் சர்தாரி இந்த வழக்கத்தை நீண்டகாலமாகப் பின்பற்றி வருவதாகவும் இதில் மூடநம்பிக்கைக்கு இடமில்லை என்றும் அவர் கூறியுள்ளார். எது எப்படியோ சர்தாரி ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை நூற்றுக்கணக்கான ஆடுகள் பலியாகியுள்ளது என்பது மட்டும் உண்மை.

அவரைப் பற்றி இன்னொரு கூடுதல் தகவல் என்னவென்றால், நம்பிக்கையின் பேரில் ஒட்டகம் மற்றும் ஆட்டுப் பாலை மட்டுமே சர்தாரி அருந்துகிறாராம். மாட்டுப் பாலை வெறுத்து ஒதுக்குகிறாராம்.



இதேவேளை, போப் இரண்டாவது ஜோன் போல் தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்ளும் பழக்கமுடையவர். இடுப்புப் பட்டியால் தன்னைத் தானே அடித்து தண்டனை அளித்துக் கொண்டதாக சமீபத்தில் வெளியான புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மிக மோசமான அளவுக்கு உடல் நிலை பாதிக்கப்பட்டால், இப்பொறுப்பிலிருந்து தான் விலகி விடுவேன் என்று கடிதம் ஒன்றிலும் அவர் குறிப்பிட்டுள்ளார். மறைந்த போப் ஜோன் போலின் அன்றாட நடவடிக்கைகளைக் கவனித்து வந்த ஊழியர் மோன்ஸிக்னர் ஆடெர் எழுதிய புத்தகத்தில் இந்தத் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

போலந்தைச் சேர்ந்தவரான ஜோன் போல், கிராகோவில் பிஷப்பாக இருந்த போதே இத்தகைய நடைமுறையைப் பின்பற்றியுள்ளார். பின்னர் போப்பாண்டவராக பதவியேற்ற பிறகும் இது தொடர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார். போப் ஜோன் போல் தன்னை இடுப்புப் பட்டியால் அடித்துக் கொள்வதைத் தாங்கள் கேட்டதாக அவருக்கு நெருக்கமானவர்கள் தெரிவித்துள்ளனர். இதை கரோல் வோஜிட்லா என்பவர் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் வீட்டு நிர்மாணப் பணிகளுக்குத் தடையாகும்




யாழ்.மாவட்டத்தில் உலக வங்கியின் நிதிப்படுத்தலின் கீழ் ஆயிரக்கணக்கான வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இதனால் பின்தங்கிய, வறுமைக்கோட்டின் கீழிலிருந்து பல கிராமங்கள் புத்தொளி பெற்றிருப்பதுடன், அங்கு வாழ்ந்துவரும் மக்களும் ஓரளவு தன்னிறைவு நிலைக்கு உயர்ந்து வருவதை அவதானிக்க முடிகிறது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் இவ்வாறான மக்களுக்கு வீடுகளை வழங்கி வரும் உலகவங்கி சில தவறுகளையும் விட்டே வந்திருக்கின்றது என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவையும் இருக்கின்றது.

ஏழை-எளிய மக்களின் வாழ்வு ஒளிபெற வேண்டும் அவர்களும் குடிசை வீடுகளைக் களைந்து தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ வீடுகளை அமைத்துக் கொண்டு ஒரு பூரணத்துவம் பெற்ற ஏனையவர்களுடன் ஒப்பிடுகையில் சராசரி மனிதர்களாக வாழவேண்டும் என்கின்ற உயரிய நல்ல நோக்கத்துடன் வீடுகளை அமைக்க உலக வங்கி நிதி வழங்கி வருகின்றது.

எனினும் இவ்வாறு வழங்கப்பட்டு வரும் நிதி போதுமானதாக இல்லை என்றும் இந்நிதியை நம்பி ஒரு வீட்டை நிர்மாணித்து முடிப்போம் என்ற நோக்கில் காலம் காலமாகத் தாம் வாழ்ந்து வந்த குடிசை வீடுகளையோ அன்றி தற்காலிக வீடுகளையோ அழித்துவிட்டு அவற்றை நிர்மாணிக்க வழிதெரியாது [போதிய நிதி வசதிகள் இல்லாது] விழி பிதுங்கி நிற்பதாக சம்பந்தப்பட்ட மக்களில் பலரும் Saturday Mailலிடம் கவலை வெளியிட்டிருக்கின்றனர்.

இதனால் சில மாதங்களிலேயே நிர்மாணித்து முடிக்க வேண்டிய வீடுகளைப் பல வருடங்கள் கடந்தும் நிர்மாணித்து முடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். பல குழந்தைகளைக் கொண்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த பலர் மழை, பனி என்னும் இயற்கை மாற்றங்களின் போது தமக்கு புகலிடம் இல்லாது தவித்து வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

உலக வங்கியின் நிதிப்படுத்தலின் கீழ் யாழ்.குடாநாட்டில் வழங்கப்பட்ட வீடுகளில் 50 வீதமான வீடுகள் நிர்மாணித்து முடிக்கப்பட்டிருந்தாலும் இன்றும் 50 வீதமான வீடுகள் அரைவாசியாகவோ, அன்றி முழுமையாகவோ நிர்மாணித்து முடிக்கப்படாது கடந்த சில வருடங்களாக இருந்து வருகின்றன என்று தான் சொல்ல வேண்டும். இதற்கு முழுமையான காரணம் நிதி வசதியில்லை என்று மட்டும் சொல்லிவிட முடியாது. பல காரணங்கள் இருக்கின்றன. மூலப் பொருட்களைப் பெறுவதில் ஏற்படும் சிக்கல் நிலை, ஏனோ தானோ என்று வீட்டு நிர்மாணிப்பு வேலைகளை விரைவு படுத்தாது தமது அன்றாட வேலைகளையே கவனித்துக் கொண்டு காலங்கடத்தும் குடும்பங்கள், வீடுகளை அரைகுறையாக நிர்மாணித்துவிட்டு இனிப்பணம் இல்லை ஏதாவது தந்தால் மட்டும் நிர்மாண வேலைகளை மீண்டும் ஆரம்பிப்போம். இல்லாது போனால் பணம் கிடைக்கின்ற போது வேலைகளைத் தொடங்குவோம் என்கின்ற அலட்சியப் போக்கு இவ்வாறான காரணங்களால் பல வீடுகள் இன்னமும் நிர்மாணித்து முடிக்கப்படாது அரையும் குறையுமாக இருந்து வருகின்றது.

இவ் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தேவைப்படும் மூலப் பொருட்களில் ஒன்றான மணலை யாழ்.மாவட்டச் செயலகமே வழங்கி வருகின்றது. இம்மணல் வெளிமாவட்டத்தில் இருந்து கொண்டு வரப்படுவதில்லை. மாவட்டத்தின் வடபகுதியான வடமராட்சிப் பகுதியிலிருந்தே [குடத்தனை, மணற்காடு] வழங்கப்பட்டு வருகின்றது. உள்ளூரிலிருந்து மணல் வழங்கப்பட்டு வந்தாலும் சில காலங்களில் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் பல இழுத்தடிப்புகளுக்குப் பின் நீண்ட நாட்கழித்தே வழங்கப்பட்டு வருவது ஒரு காரணமாக அமைந்திருக்கின்றது.

அதற்கான காரணந்தான் என்னவென்பது இன்னும் புரியாத புதிராகவே இருந்து வருகின்றது. இதை உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு கேட்டாலும் உரிய பதிலேதும் கிடைப்பதில்லை. வீடு நிர்மாணிப்புக்குத் தேவையான பிரதான மூலப் பொருட்களின் ஒன்றான சீமெந்தைப் பல மைல்களுக்கு [தென் பகுதியிலிருந்து] அப்பாலிருந்து மிகச் சுலபமாக எடுத்து வந்தாலும் அவற்றுக்குச் சேர்க்கையாகப் பயன்படுத்தி வீடு நிர்மாணிப்பு வேலைகளைத் தொடரக்கூடிய மணலைப் பெறுவதற்கு பல நிபந்தனைகளும் பல கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டே வருகின்றன.

இதுவும் வீடு நிர்மாணிப்பு வேலைகளை விரைவு படுத்துவதற்குப் பதிலாக மந்தகதிக்கு இட்டுச் செல்கின்றது.

அத்துடன் காலதாமதத்தை ஏற்படுத்திப் பயனாளிக் குடும்பங்களுக்கு பல்வேறு அசௌகரியங்களைக் கொடுக்கும் செயற்பாடாகவும் அமைந்திருக்கின்றது.

தற்போது இடம்பெற்று வரும் வீடமைப்பு வேலைகளுக்கு யாழ்.குடாநாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்படுகின்றன. தொடர்ந்தும் அழிக்கப்பட்டே வருகின்றன. இவற்றை அழித்து தமது தேவைகளைப் பூர்த்தி செய்து வரும் மனிதர்கள் மாற்றீடான வழிகளையோ அன்றி மீள் நடுகைகளை மேற்கொள்வது பற்றியோ சிறிதளவேனும் சிந்திப்பதில்லை. இதனால் இன்னும் சில வருடங்களில் பனைவளம் என்ற ஒன்று இல்லாது ஒழிந்துவிடுமோ? என்ற அபாயநிலை ஏற்பட்டிருப்பதையும் இங்கு சிந்தித்தாக வேண்டும்.

வீடு நிர்மாணிப்புக்கு வழங்கப்படும் நிதியிலிருந்து மூலப் பொருள் கொள்வனவு, கூலிப் பணம், உணவு மற்றும் இதர செலவுகளை மேற்கொள்ளும் வேறு மேலதிக நிதி கிடைக்காது போகவே வீட்டு வளவுகளில் தமது சொத்தாக நிற்கும் பனை வளங்களை அழித்து வீட்டுக் கூரைகளை நிர்மாணித்து வரும் பயனாளிக் குடும்பங்கள் தம்மையும் அழித்து வருகின்றன என்று உணர்ந்து கொள்வதில்லை. அவ்வாறு பனை மரங்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்தாலும் மீள் நடுகை மூலம் புதியதொரு பனை வளத்தை உருவாக்க முயல்வது பற்றியும் சிந்திப்பதில்லை. இதை ஆக்கப்பாடான செயற்பாடு ஒன்றுக்காகவே பயன்படுத்துகின்றோம் என்று அவர்கள் சிந்தித்தாலும் அது அழிவுப் பாதைக்கே தம்மை இட்டுச் செல்கின்றது என்பது பற்றியும் சிந்தித்தாக வேண்டும்.


பனை வளத்தைப் பாதுகாக்க அரிதான வழிகள் பல உண்டு. அவற்றை அழிக்காமல் விடுவது ஒன்று. அழிப்புகளை மேற்கொள்ளும் போது பதிலாக மீள் நடுகைத் திட்டங்களை முன்னெடுத்தல் இரண்டு. அவற்றுக்குப் பதிலீடான [மாற்றீடான பொருட்களை] பொருட்களைப் பயன்படுத்துவது மூன்று. இவ்வாறு பலவழிகளில் பாதுகாப்புத் திட்டங்களை முன்னெடுக்க முடியும்.

தற்போது ஏ-9 நெடுஞ்சாலை திறக்கப்பட்டதால் யாழ்.குடாநாட்டுக்கு உருக்கிரும்புக் கேடர்களும், காட்டு மரங்களும் தாராளமாக எடுத்து வரப்படுகின்றன. இவற்றை வீட்டு நிர்மாணப் பணிகளுக்கு மாற்றீடான பொருட்களைப் பயன்படுத்தினால் எமது செல்வமான பனை வளத்தைப் பாதுகாக்க முடியும் தானே?

**செ.சக்திதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண், பெண் இணைந்த பணியில் சமூகத்தின் தவறான பார்வை



ஆணும் பெண்ணும் இணைந்ததே வாழ்க்கை.அந்த வாழ்வு முழுமைபெற வேண்டுமாயின் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் மதித்துச் செயற்பட வேண்டும்.ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறார் என்பதைப் போல ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு ஆண் இருப்பதை எவரும் மறுக்க முடியாது. ஆணும் பெண்ணும் இணைந்து சில செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியதன் அவசியம் இதனூடாக வலியுறுத்தப்படுகின்றது.

ஆனால்,எமது சமூகத்தில் ஆண்-பெண் இணைந்த செயற்பாடுகள் தொடர்பாக இருக்கின்ற 'சமூகப் பார்வையானது' தவறானதாகவே இருக்கின்றது.ஒரு ஆணும் பெண்ணும் தனியாக வீதியில் சென்றாலோ ஓரிடத்தில் நின்று கதைத்தாலோ அவர்களை சமூகம் 'காதல்' என்ற கண்கொண்டே நோக்குகின்றது.அண்ணன் தங்கை வீதியில் சென்றால் கூட ஏன் தகப்பனும் மகளும் சென்றால் கூட அவர்களைத் தெரியாதவர்கள் வித்தியாசமான கோணத்திலேயே பார்க்கின்றனர்.

இன்றைய உலகம் வேகமான விஞ்ஞான வளர்ச்சிக்குள் சென்றுகொண்டிருக்கின்றது.இந்நிலையில் எமது பிரதேசங்களிலுள்ள கிராமப் புறங்கள் எதுவுமே அறியாத 'மூட்டைப்பூச்சி வர்க்கமாகவே' வாழ்ந்து கொண்டிருக்கின்றது.இந்தச் சமூகத்தை விழிப்படையச் செய்யவேண்டிய பணியில் அந்தச் சமூகத்திலுள்ள கிராமப் புறங்களிலுள்ள இளைஞர், யுவதிகள் இணைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

ஆனால், இதனைக் கருத்தில் கொண்டு கிராமப்புற இளைஞர், யுவதிகள் சிலர் இணைந்து செயற்படுகின்ற போது அவர்களும் இந்தச் சமூகத்தின் விரும்பத்தகாத பார்வைக்கு ஆளாகின்றனர்.சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்டு ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒரு குழுவை உருவாக்கிச் செயற்படுகின்ற போது பல்வேறு விடயங்கள் தொடர்பாக பல தடவைகள் அவர்கள் சந்திக்கவேண்டி ஏற்படுகின்றது.சமூக அபிவிருத்திக்கு மக்களைத் தயார்படுத்துவதற்காக பல பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி நடத்த வேண்டி ஏற்படுகின்றது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மிகத் தீவிரமாகச் செயற்படுகின்ற அந்த ஆணையும் பெண்ணையும் சமூக சேவையாளர்கள் என்பதற்கு அப்பால் 'காதலர்கள்' என்ற கண்கொண்டே சமூகம் நோக்குகின்றது.இந்தப் பார்வையானது நாளடைவில் சமூகத்திலுள்ளவர்களிடையே கதைகளாகக் கருக்கட்டிப் பரவுகின்ற போது அந்த ஆணும் பெண்ணும் மன உளைச்சலுக்குள்ளாகி சமூக வேலையிலிருந்து வெளியேறவேண்டிய நிலையும் ஏற்படுகிறது.



இந்தச் சமூக நோக்குகை என்பதற்கு அப்பால் பொது வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்ற ஆண்களும் பெண்களும் தங்களுக்குள்ளேயே சில எண்ணங்களை வளர்ப்பதும் இன்று வழக்கமாகி வருகின்றது.அதாவது தன்னோடு இணைந்து வேலை செய்கின்ற பெண் விடயத்தில் அந்த பெண்ணுக்குத் தெரியாமல் ஆணுக்குத் தெரியாமல் ஆணும் பெண்ணும் தங்கள் மனதுக்குள் 'கற்பனைகளை' வளர்க்கின்றனர்.இது நாளடைவில் சமூக வேலைத்திட்டங்களை பாதிக்கின்றது.

யாழ்.மாவட்டத்திலிருக்கின்ற கிராமப் புறங்கள் பலவும் தொடர்ந்து பின்தங்கியவையாக இருப்பதற்கு இவ்வாறான சம்பவங்களே முழுக் காரணமாக இருக்கின்றன. இதுபோன்ற செயல்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையல்ல. தொடர்ச்சியாகப் பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற எமது கிராமப் புறங்களைத் தூக்கி நிறுத்தி அபிவிருத்தி செய்வதற்கு அங்குள்ள ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே புரிந்துணர்வு ஏற்படுகின்ற அதேவேளை, அவர்கள் சார்ந்த சமூகமும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

கிராமப் புறங்களில் வசிக்கின்ற இளைஞர்,யுவதிகள் மட்டுமன்றி அரச,அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில்புரிகின்ற இளைஞர், யுவதிகளுக்கிடையேயும் இந்தத் 'தொற்று நோய்' பரவுகின்றது.இதனை ஆரம்பத்திலேயே இல்லாமல் செய்யாத பட்சத்தில் அவர்கள் பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். குறிப்பாக இவர்கள் விடயத்தில் நிறுவனத் தலைவர்கள் அல்லது முகாமையாளர்கள் வித்தியாசமான பார்வையைச் செலுத்துகின்றனர். இதனால் விரும்பியோ, விரும்பாமலோ அவர்களுடன் முரண்படவேண்டிய நிலை ஏற்படுகின்றது.இது அவர்களின் அன்றாடப் பணிகளைப் பாதிக்கின்றது.

நிறுவனத்திலிருந்து சென்று வெளிக்களப் பணிகளில் ஈடுபடுகின்ற ஆண்களும் பெண்களும் நடந்துகொள்கின்ற முறைகளைப் பார்க்கின்றவர்கள் அவர்களைச் சந்தேகிக்க வேண்டியநிலை ஏற்படுகின்றது.இது நிறுவனத்தின் முகாமைத்துவத்திற்குத் தெரியவருகின்ற போது தங்கள் நிறுவனத்தின் நன்மை கருதி அவர்களை வேலையிலிருந்து நிறுத்த வேண்டிய நிலையும் ஏற்படுகின்றது.

எனவே, இந்தச் சமூகச் செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற ஆண், பெண் (இளையோர்) விடயத்தில் சமூகம் ஒரு முகப்பட்ட பார்வையுடன் செயற்படவேண்டும். தங்களுடைய சமூக மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு இவ்வாறு செயற்படவேண்டியது அவர்களின் தலையாய கடமை.தமது சமூகத்திற்காகப் பணியாற்றுகின்ற இளைய ஆண்,பெண் விடயத்தில் சமூகத்தவர்கள் தவறான பார்வைகளைச் செலுத்தக்கூடாது.

இதேபோல,சமூக வேலைத்திட்டங்களில் ஈடுபடுகின்ற ஆண்களும் பெண்களும் தமக்கிடையே ஒரு புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும்.சமூகத்தின் வளர்ச்சியையே நோக்கமாகக் கொண்டு தங்களை அர்ப்பணித்துச் செயற்படுகின்ற இவர்கள் சமூகம் தங்கள் மேல் தவறான பார்வையைச் செலுத்துவதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தக் கூடாது.இந்த விடயத்தில் இவர்கள் கண்ணுங் கருத்துமாக செயற்படுவதன் மூலமே தங்கள் நோக்கங்களையும் இலட்சியத்தையும் அடைய முடியும்.

**என்.பிருந்தாபன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'என் தந்தையை அமெரிக்காவால் கொல்ல முடியாமல்போனது அந்நாடு செய்த அதிர்ஷ்டம்'

சர்வதேச பயங்கரவாதியென அறிவிக்கப்பட்டுள்ள ஒசாமா பின்லேடனின் 11 மகன்களில் ஒருவர் ஓமர் பின்லேடன். அவர் சூடான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள தீவிரவாத முகாம்களில் தங்கி தீவிரவாத பயிற்சி பெற்றார். 2001 ஆம் ஆண்டு அமெரிக்கத் தாக்குதல் நடப்பதற்கு சில மாதங்களுக்கு முன்பு அவர் தன் தந்தையை விட்டுப் பிரிந்து விட்டார்.

2007 ஆம் ஆண்டு அவர் தன் வயதை விட இரு மடங்கு அதிக வயதுள்ள இங்கிலாந்து நாட்டு பெண்ணை மணந்து கொண்டதன் மூலம் பரபரப்பை ஏற்படுத்தினார். இவர் தன் மனைவியுடன் இங்கிலாந்து நாட்டில் வசிக்க முயன்றார். அவரை அந்த நாட்டுக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. கட்டார், எகிப்து, ஸ்பெயின் நாடுகளும் அவருக்கு அனுமதி மறுத்துவிட்டன.

சிரியா நாட்டில் டமாஸ்கஸ் நகரில் அவர் அமெரிக்க பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி அளித்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது;

ஆப்கானிஸ்தானுக்கு அதிக துருப்புகளை அனுப்பியதன் மூலம் ஒபாமா தவறு செய்துவிட்டார். நான் அவர் இடத்தில் இருந்திருந்தால், தீவிரவாதிகளுடன் சமரசம் செய்துகொண்டு இருப்பேன். இராணுவத்தைத் திருப்பி அனுப்பி இருப்பேன். ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவுக்கு ஒருபோதும் வெற்றி கிடைக்காது. இதற்கு என் தந்தை காரணம் இல்லை. ஆப்கானிஸ்தானியர்களின் போர்க்குணம் தான் காரணம்.

2000 ஆம் ஆண்டு புஷ் ஜனாதிபதியாகத் தேர்ந்து எடுக்கப்பட்டபோது என் தந்தை ரொம்பவும் சந்தோஷப்பட்டார். ஏனெனில், புஷ் தான் அமெரிக்காவுக்கு அப்போது தேவைப்பட்ட தலைவர் என்று அவர் கூறினார். பிறநாடுகளின் மீது தாக்குதல் நடத்தி, அதற்காகப் பணத்தை செலவிட்டு நாட்டை அழித்து விடுவார் என்று என் தந்தை கணித்து இருந்தார்.

என் தந்தையை அமெரிக்காவால் கொல்ல முடியாதது அந்த நாடு செய்த அதிர்ஷ்டம். அவர் மட்டும் கொல்லப்பட்டு இருந்தால், நிலைமை இன்னும் மோசமாகி இருந்து இருக்கும். அவர் மட்டும் கொல்லப்பட்டால், உலகம் முழுவதும் உள்ள தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தி பேரழிவை ஏற்படுத்துவார்கள்.

என் தந்தை மதப்பற்று உள்ளவர். அவருக்கு என்று இலட்சியம் உள்ளது. தேவை ஏற்பட்டால் மட்டுமே கொலைகளைச் செய்வார். மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தவேண்டிய தேவை அவருக்கு இப்போது இல்லை என்றே நான் கருதுகிறேன். அமெரிக்காவை அவர் நிலைகுலையச் செய்துவிட்டார். அந்த அளவில் இது அவருக்கு சாதனை தான். ஆப்கானிஸ்தானுக்கு அமெரிக்க வீரர்கள் சென்றதுமே அவர் நினைத்த திட்டம் செயல்படத் தொடங்கிவிட்டது. அவர் ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டார்.



# அன்பான மனைவி?




ஒரு பெண் தனது கணவருடன் டாக்டரைப் பார்க்கப் போனாள்.

மருத்துவப் பரிசோதனைகள் முடிவடைந்ததும் பெண்ணைத் தனது அறைக்கு தனியாகக் கூட்டிக் கொண்டுபோன டாக்டர் 'உங்கள் கணவர் கடுமையான மன அழுத்தக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருக்கிறார். நான் கூறுகிற ஆலோசனைகளைக் கேட்டு நீங்கள் செயற்படாவிட்டால் கணவர் நிச்சயமாக விரைவில் இறந்துவிடுவார்' என்று கூறினார்.

ஒவ்வொரு நாளும் காலையில் கணவருக்கு நல்ல போசாக்குடைய சாப்பாடு கொடுங்கள். அவருடன் சகல வேளைகளிலும் மகிழ்ச்சியாகப் பழகுங்கள். மதிய போசனத்தையும் ஆரோக்கியமாக வழங்குங்கள். நன்கு ஜீரணிக்கக்கூடிய இரவு உணவை வழங்குங்கள்.

வீட்டு வேலைகளை அவரும் சேர்ந்தே செய்ய வேண்டுமென்று எதிர்பார்க்காதீர்கள். அத்தகைய சுமைகளை அவருக்கு ஏற்றாதீர்கள். உங்களுடைய பிரச்சினைகளைக் கணவருக்குக் கூறி மன அழுத்தத்தைக் கொடுக்காதீர்கள். அவரில் பிழைகண்டுபிடித்து நச்சரிக்காதீர்கள். அவருடன் நன்றாக நெருங்கிப் பழகி அடிக்கடி பாலியல் உறவு வைத்துக்கொள்ளுங்கள். தொடர்ந்து 10 மாதங்களுக்கு இவ்வாறு செய்வீர்களேயானால் உங்கள் கணவர் பூரணமாகத் தேறி ஆரோக்கியமானவராக வருவார்!

இதுவே டாக்டர் மனைவியிடம் கூறிய ஆலோசனை.

வீடு திரும்பும் வழியில் கணவர் மனைவியைப் பார்த்துக் கேட்டார்- 'டாக்டர் என்ன சொன்னார்'.

மனைவியின் பதில்- 'நீங்கள் சாகப் போகிறீர்கள் என்று டாக்டர் சொன்னார்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவைகளும் மக்களின் பங்கும்

இன்று சுகாதாரம் சார்ந்த பிரச்சினைகள் நாளுக்கு நாள் பெருகிவருவதும் அவை ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டு பரபரப்பை ஏற்படுத்துவதும் மிகவும் சாதாரணமாக நடைபெறுகின்றது.

இவ்வாறான செய்திகள் பத்திரிகைகளிலோ, வானொலியிலும், தொலைக்காட்சியில் கேட்டோ, வாசித்தோ பார்க்கும் போது அட இவ்வளவு பெருக்கு இந்த நோயாம் வைத்தியசாலைகளில் சரியான வசதிகள் இல்லை, அல்லது சரியான மருத்துவ வசதிகள் வழங்கப்படவில்லை, மருந்துகள் சரியாகக் கிடைப்பதில்லை என இன்னோரன்ன செய்திகளை ஆச்சரியத்துடன் நோக்குவதுடன், முன்னர் இப்படியல்ல இப்பதான் இப்படி நடைபெறுகின்றது என்பதுடன் இதற்கு அரசாங்கமும் அரச அதிகாரிகளும் தான் முழு அளவில் காரணம் என்பது போல் எண்ணத்தை வளர்ப்பதுடன், அதனை சாதாரணமாக எல்லோரும் ஏற்றுக்கொள்வது போல் இருப்பதும் அவதானிக்கத்தக்கது.

இது மட்டுமல்லாது வைத்தியசாலைகளுக்கு நோய்க்குச் சிகிச்சை பெறச் செல்லும் போதோ அல்லது உறவினர் ஒருவரைச் சிகிச்சைக்கு அழைத்துச் செல்லும் போதோ சரியான உரிய சிகிச்சையோ, வசதிகளோ செய்து கொடுக்கப்படுவதில்லை எனக் கவலையடைதல் அல்லது கோபமடைதல் அல்லது அங்குள்ளவர்களுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபடுதல் அவதானிக்கத்தக்கது.

ஆனால் நாம் இவ்வாறான முக்கிய விடயங்களை அத்துடன் நிறுத்திக் கொள்வதுடன் அவைபற்றி மேலதிகமாக ஆராய்வதில்லை. ஏன் இது இவ்வாறு இருக்கின்றது? இதற்கான காரணங்கள் என்ன? இவ்வாறான பிரச்சினைகளுக்கு யார் பொறுப்பு? இதனை எவ்வாறு மாற்றி அமைக்கலாம்? அதனை எவ்வாறு செயற்படுத்துவது? இவ்வாறான விடயங்களை நம்மில் எத்தனை பேர் சிந்தித்துப் பார்க்கின்றோம். இவைபற்றி மற்றவர்களுடன் விவாதிக்கிறோம். விவாதிக்கப்பட்ட விடயங்களிலும் எத்தனை விடயத்தைச் செயற்படுத்த முற்படுகிறோம்.

நாம் இவ்வாறு செயற்படாததற்குரிய விடயங்களை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

இதற்கான முதற் காரணம் எனக்கூறக்கூடியது சுகாதார சம்பந்தமான அறிவு மக்களிடம் குறைவாக அல்லது குறைந்தளவு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் காணப்படுவதாகும். நாம் இவ்வாறான அறிவு மக்கள் மத்தியில் குறைவாகக் காணப்படுவதற்குக் காரணங்கள் எவை என ஆராய்வோம்.



பொதுவாக எம்மத்தியில் ஒரு விடயம் பற்றிய அறிவினை வழங்கக் கூடிய வழிகள், கட்டமைப்புகள் குறைவாகக் காணப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்வாறான வசதிகள், கட்டமைப்புகள் பெருமளவில் செயற்படுவது கண்கூடு. இவற்றில் பெரும்பாலானவை பொது அமைப்புகளினால் மக்களினால் நோயாளிகளினால் ஏற்படுத்தப்பட்டவை. அவற்றுடன் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டவையும் செயற்படுகின்றன. ஆனால் எம்மிடம் அவ்வாறான வசதிகள் குறைவாகக் காணப்படுகின்றன. அரசாங்கத்தினால் குறைந்தளவு வளங்களையே இதற்கு ஒதுக்கக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு குறைந்தளவில் ஒதுக்கப்பட்ட வளங்களும் சரியான தகவல்களை சரியானவர்களைச் சென்றடைகிறதா என்பது கேள்விக்குரியது.

பொது அமைப்புகளினதோ அல்லது தனியார் அமைப்புகளினது பங்குபணி இவ்விடயத்தில் குறைந்தளவிலேயே செயற்படுத்தப்படுகின்றன. அவ்வாறான செயற்பாடுகளில் எவ்வளவு விடயங்கள் சரியான முறையில் மக்களைச் சென்றடைகின்றன என்பது கேள்விக்குரியதே. ஆனால் இன்று அவதானிக்கக்கூடிய விடயம் என்னவெனில், பல்வேறு பொது அமைப்புகளும், தனியார் அமைப்புகளும் இவ்விடயம் சம்பந்தமாகக் கூடியளவு கவனத்தைச் செலுத்துகின்றமை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது.

ஆனால் இவ்வாறான முயற்சிகளில் எவ்வளவு விடயங்கள் சரியாக மக்களைச் சென்றடைகின்றன என்பது அடுத்த மிகப்பெரிய பிரச்சினை.

இன்று பல ஊடகங்களும் சுகாதாரம் சம்பந்தமான விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றன. இதில் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தின் அளவு மற்றும் அவற்றின் விளைவுகள் பற்றி ஆராய்வது இன்னொரு விடயமாகும். ஆனால் ஊடகங்களினால் மக்களுக்கு கொடுக்கப்படும் சுகாதார தகவல்களில் எவ்வளவு உண்மையாக மக்களைச் சென்றடைகின்றன என்பது இன்னொரு விடயம். அநேகமான சுகாதாரம் சம்பந்தமான தகவல்கள் மக்களைச் சென்றடைவது குறைவாகவே காணப்படுகின்றது. இதற்கு பல காரணங்கள் கூறப்படலாம்.

1. மக்கள் மத்தியில் இவை பற்றிய அறிவைப் பெருக்கிக் கொள்வதில் உள்ள ஆர்வமின்மை.
2. இவ்வாறான விடயங்கள் மக்களைக் கவரக்கூடிய விதத்தில் மாற்றியமைக்கப்படாமை.


எனவே நாம் இன்று மக்களிற்கு சுகாதார சேவைகள் பற்றிய அறிவை வழங்க வேண்டியவர்களாக உள்ளோம். மக்களுக்கு சுகாதாரம் பற்றிய அறிவூட்டல் ஆனது எதிர்கால சுகாதார விருத்திக்கு மிகவும் அவசியமானது. அவ்வாறான அறிவூட்டல் ஆனது சரியான ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் மக்களைச் சென்றடைய வேண்டும். வழங்கப்படும் தகவல்கள் சரியானவையாக எமது பிரதேசங்களிற்கு ஏற்றவையாக அமைதல் வேண்டும். இது மட்டுமல்லாது மக்கள் இவ்விடயங்களை அறியும் ஆவலைத் தூண்டுதல் அவசியம்.

உதாரணமாக பத்திரிகையில் இவ்வாறான தகவல்கள் தரும் விடயமுடைய பக்கத்தை வாசிக்கக்கூடிய ஆர்வத்தைத் தூண்டுதல் அவசியமானதாகும். பலர் பத்திரிகைகளில் வரும் சில பகுதிகளை வாசிப்பதில் காட்டும் ஆர்வத்தை சுகாதாரம் சம்பந்தப்பட்ட பந்திகளை வாசிப்பதில் காட்டுவதில்லை. அத்துடன் சுகாதாரம் சம்பந்தப்பட்ட தகவல்களை வழங்குபவர்களும் அவற்றை மக்களை வாசிக்கத் தூண்டுதல் அவசியம். இந்த விடயம் சரியான முறையில் தற்போது கையாளப்படாமையே அண்மையில் பல தொற்றுநோய்கள் பற்றிய அறிவு மக்களுக்கு வழங்கப்பட்டும் மக்கள் அவ்நோய்களின் கட்டுப்பாட்டின் ஆர்வமின்றிக் காணப்படுகின்றமை கண்கூடு.

மிகவும் முக்கியமான டெங்கு நோய் பற்றிய கட்டுப்பாடு பற்றி பல கட்டுரைகள், செய்திகள் மக்களுக்குத் தெரியப்படுத்திய பின்னரும் மக்கள் அதிகளவு அக்கறை செலுத்தாமல், வருடத்துக்கு வருடம் அந்நோயின் அளவு அதிகரித்துச் செல்கின்றது. எனவே சுகாதாரத் தகவல்களை சரியான முறையில் மக்களைச் சென்றடையச் செய்தல் மக்களை சுகாதார முன்னேற்றத்திற்கு பங்குபற்றும் முக்கியமான விடயம். இதனைச் சரியான முறையில் செய்வதை உறுதி செய்வோம்.

**டாக்டர்**
**இ.சுரேந்திரகுமாரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதெல்லாம் மூடநம்பிக்கை...

செக்ஸ் வைத்துக் கொள்ள ஆரம்பித்த பின்னர் பெண்களுக்கு உடம்பில் கொழுப்புச் சத்து சேரும். மார்பகங்கள், இடுப்புகள் பெருத்து விடும் என்று கூறப்படுவது சுத்தமான மூட நம்பிக்கைதான் என்கிறார்கள் மகப்பேறு மருத்துவர்கள்.

ஒரு பெண் தொடர்ச்சியாக செக்ஸ் உறவு வைத்துக் கொள்ள ஆரம்பித்துவிட்டால் அவரது உடல் பெருத்து விடும். மார்புகள் பெரிதாகி விடும். இடுப்புகள் பெருத்து விடும் என்ற நம்பிக்கை பெண்களிடையே உள்ளது.

ஆனால், இதெல்லாம் ஒரு விதமான மூட நம்பிக்கைதான் என்கிறார்கள் மகப்பேறு மருத்துவர்கள்.

அதேசமயம், செக்ஸ் உறவை வைத்துக் கொள்ள ஆரம்பித்த பின்னர் பெண்களுக்கு மார்புகள், இடுப்புகள் பெருப்பது உண்மைதான். ஆனால் இதற்கும் செக்ஸ் உறவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பதே உண்மை.

அதேபோல கல்யாணத்திற்குப் பின்னர் ஆண்களும் பெண்களும் தண்டாகி விடுகிறார்கள். இப்படிக் தண்டாவதற்கும் செக்ஸ் உறவுக்கும் கூட சம்பந்தம் இல்லை.

செக்ஸ் காரணமாக உடல் பெருக்கம் ஏற்படுவதில்லை. செக்ஸ் உறவின் போது ஏற்படும் திருப்தி, அதனால் ஏற்படும் உடல் பூரிப்பு, மன ரீதியான நிம்மதி, கல்யாணம்தான் ஆகிவிட்டதே என்ற ஆறுதல் மனப்பான்மை, அதுவரை கடைப்பிடித்து வந்த உணவு, உடற்பயிற்சிக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டவை தளரும் போது இப்படி உடல் பெருக்கம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

தனியாக இருப்பவர்களை விட கல்யாணம் செய்து கொண்டவர்கள் மற்றும் செக்ஸ் உறவில் ஈடுபடுபவர்கள் கூடுதலாக சாப்பிடுவார்கள் என்று ஒரு ஆய்வு கூறுகிறது. எனவே, உடல் பெருக்கத்திற்கு இதுவும் கூட ஒரு காரணமாக அமைகிறது.

கல்யாணத்திற்குப் பிறகும், செக்ஸ் உறவைத் தொடங்கிய பிறகும் உடல் பருமன் அதிகரிக்கக் கூடாது என யாராவது விரும்பினால், நிச்சயம் அவர்கள் தொடர்ந்து உடற்பயிற்சிகளையும், உணவுக் கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தாக வேண்டும். அப்போதான் பருமனாவதைக் குறைக்க முடியும் என்கிறார்கள் டாக்டர்கள்.



# வாழ்த்து மடல் தேடிய கணவர்

புத்தகசாலை ஒன்றிற்குள் புகுந்த நபர் ஒருவர் தனது திருமண வருடாந்தக் கொண்டாட்டத்தின் போது மனைவிக்கு கையளிப்பதற்கு வாழ்த்துமடலொன்றை வாங்க விரும்பினார்.


சில நிமிடங்களிலேயே ஒரு வாழ்த்து மடலை அவர் வாங்கிக் கொண்டு புறப்படத் தயாரான போது புத்தகசாலையின் விற்பனையாளர்களில் ஒருவர் அவரிடம் ஓடிவந்து 'நீங்கள் மிகவும் விரைவாக வாழ்த்துமடலைத் தெரிவுசெய்து விட்டீர்கள்' எனக்கு மிகுந்த ஆச்சரியமாக இருந்தது உங்களைப் பார்த்ததும்.

'நேற்று ஒருவர் உங்களைப் போன்றே மனைவிக்கு கொடுப்பதற்கு வாழ்த்துமடலொன்றை வாங்க வந்து அரைமணித்தியாலமாக தெரிவுசெய்தும் திருப்தியடையாதவராகக் காணப்பட்டார்' என்று கூறினார்.

'அந்த நபருக்கு நீங்கள் உதவிசெய்து நல்லதோர் வாழ்த்து மடலைத் தெரிவுசெய்து கொடுப்பீர்களா' என்று இவர் கேட்டார்.

'நீண்ட நேரமாகத் தேடுகிறீர்களே, உங்களால் இன்னமும் பொருத்தமான வாழ்த்துமடலைத் தெரிவுசெய்ய முடியாதிருப்பதன் காரணம் என்ன?' என்று அவரிடம் கேட்டதாகவும் அதற்கு அவர் 'எனது மனைவி நம்பக்கூடிய வாசகங்கள் கொண்ட வாழ்த்துமடலை என்னால் தேடிக்கண்டு பிடிக்க முடியாமல் இருக்கிறது' என்று பதிலளித்ததாக விற்பனையாளர் கூறினார்.

# Woman without man




ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் கரும்பலகையில் *"Woman without her man is nothing'* என்ற வசனத்தை எழுதிவிட்டு நிறுத்தக் குறிகளிடுமாறு *(Punctuate)* மாணவர்களுக்கு உத்தரவிட்டார்.

*"Woman, without her man, is nothing'* என்று மாணவர்கள் எழுதினார்கள்.

மாணவிகள் *"Woman! without her, man is nothing'* என்று எழுதினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1.5 பில்லியன் பேர் வேலை இழக்கும் அபாயம்

உலகம் முழுவதிலும் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 200 மில்லியனாக அதிகரித்துள்ளதாக ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. உலக நாடுகள் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வரும் நிலையில் சர்வதேச தொழிலாளர் அமைப்பு நடத்




திய ஆய்வில் 2009 ஆம் ஆண்டில் 212 மில்லியன் மக்கள் வேலையில்லாதவர்களாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இது 2007 ஆம் ஆண்டை விட 19 சதவீதம் அல்லது 34 மில்லியன் அதிகமானதாகும்.

உலகில் வேலை உள்ளவர்களின் ஆண்டு புள்ளி விபரப்படி வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 2008 ஆம் ஆண்டு இறுதியில் 0.9 சதவீதம் அதிகரித்ததாகவும் 2009 ஆம் ஆண்டின் முடிவில் 6.6 சதவீதம் அதிகரித்து இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புள்ளிவிபர பட்டியலின் படி 1991 ஆம் ஆண்டு வேலையில்லாதவர்கள் எண்ணிக்கை மிக அதிகபட்சமாக 13.4 சதவீதமாக இருந்தது. இளைஞர்களின் கடுமையான உழைப்பால் படிப்படியாக குறைந்து 2007 ஆம் ஆண்டு 1.6 சதவீதமாக இருந்தது. தற்போது மீண்டும் அதிகரிக்கத் துவங்கி உள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இயக்குனர் குவான் சோமாவியா கூறியதாவது; முடிவற்ற நிலையில் சென்று கொண்டிருக்கும் வங்கிகள் திவாலாகும் நிலையை தடுத்து நிறுத்தி, வேலை வாய்ப்பை உருவாக்கித் தருவதே, வேலையில்லாதோர் எண்ணிக்கையை குறைப்பதற்கான சரியான தீர்வாக இருக்கும்.

சரிவடைந்து வரும் சர்வதேச பொருளாதார நிலை இவ்வாண்டு முன்னேற்றகரமாக இருக்கும் ஐ.எம்.எஃப் நிறுவனம் உலக பொருளாதாரம் பற்றிய அறிக்கையில் 2010 ஆம் ஆண்டு உலக பொருளாதாரம் 3.9 சதவீதம் அதிகரிக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2010 ஆம் ஆண்டு உலகில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 6.1 சதவீதத்தில் இருந்தது. 7 சதவீதமாக உயருமெனவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது 1.5 பில்லியன் மக்கள் வேலை இழக்கும் நிலை உள்ளதாகவும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உங்களுக்கு பணம் தந்தவரை பற்றி எனக்கு அக்கறையில்லை



ஜோன்சன் என்ற இளைஞனின் பாட்டனார் இறக்கும் போது 30 இலட்சம் ரூபாவை விட்டுச் சென்றார். அந்தப் பணத்துக்கு உரிமையாளனாகிவிட்ட ஜோன்சனை டயானா என்ற அழகிய இளம் பெண் திருமணம் செய்ய முன்வந்தார்.

திருமணமாகி மூன்று மாதங்களுக்குப் பிறகு டயானா தன்னை அலட்சியம் செய்ய ஆரம்பிப்பதை ஜோன்சன் அவதானித்தார். இருவருக்கும் இடையேயான நெருக்கமும் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. ஜோன்சனும் டயானாவும் மிகவும் அரிதாகவே ஒரே படுக்கையில் நித்திரை செய்தார்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட டயானா மிகவும் அலட்சியமாகவே நடந்துகொண்டாள். வெளியே செல்லும் தருணங்களில் எல்லாம் அவள் வேறு ஆண்களின் பெயர்களைக் கூறவும் ஆரம்பித்தாள்.

ஒரு கட்டத்தில் ஜோன்சனை முற்றாக அலட்சியம் செய்த அவள் வேறு ஆண்களுடன் கூடித்திரிந்தாள்.

டயானாவின் இந்தப் போக்கின் காரணத்தைக் கண்டறிந்துவிட வேண்டுமென்று தீர்மானித்த ஜோன்சன், டயானாவை ஒருநாள் அழைத்து 'எனது பாட்டனார் இறக்கும் போது எனக்காக விட்டுச் சென்ற 30 இலட்சம் ரூபா பணத்துக்காகத் தானே என்னை நீ திருமணம் செய்தாய்' என்று கேட்டார்.

'முட்டாள்தனமாகக் கதைக்காதீர்கள். உங்களுக்கு யார் காசு தந்தார்கள் என்பதைப் பற்றி நான் அக்கறைப்படுவதில்லை' என்று அதற்குப் பதில் சொன்னாள் டயானா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு மக்களின் கைத்தொழில் உற்பத்திகளுக்கு மீண்டும் 'கிராக்கி'

கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய யுத்த நிலைமையினாலும் நவீன உற்பத்திப் பொருட்களின் அதிகரிப்பினாலும் வட மாகாணத்தில் சுய சார்புக் கைத்தொழில்கள் அழிந்து சென்ற போதும் தற்போது ஏ-9 வீதி திறப்புக்கு பின்னர் குடாநாட்டு மக்களின் கைத்தொழில் உற்பத்திகளுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டிற்கே உரித்தான பனை உற்பத்திப் பொருளின் சந்தை வாய்ப்புகள் அண்மைக் காலங்களில் குறைவாக இருந்தமையினால், கைத்தொழில்களில் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைவடைந்தது.

எனினும் தற்போது நிலவியுள்ள சுமுக நிலையில் யாழ்ப்பாணத்தில் ஆண்களின் துணையின்றி வாழும் பெண்களினது வாழ்விற்கு பொருளாதார வசதியினை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாக ஏற்றுமதிப் பொருளாக பனம் பொருள் உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன.



இது தொடர்பாக யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த புளுக்கொடியல் உற்பத்தியாளர் ஒருவர் கூறுகையில்;


'யுத்தத்தினால் பாதிப்புற்ற மக்கள் சூழலை மாசடையச் செய்யாத வகையிலான தொழில் துறையினை மேற்கொள்ள ஊக்குவிக்கும் செயற்பாடுகள் குறைந்து கொண்டு செல்கிறது. கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய சூழ்நிலையினால் பல சிரமங்களுக்கு மத்தியில் மேற்கொள்ளப்பட்டாலும் கூட உள்ளூர் உற்பத்திகளை கொள்வனவு செய்வோரின் எண்ணிக்கை குறைவாகவுள்ளது.

சுற்றுச்சூழல் மாசடைவதைப் பற்றி பேசுவோர், சூழலிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத, அனைத்துப் பகுதிகளையும் பொருளாதாரப் பொருளாகப் பயன்படுத்தும் பனை மரத்தின் உற்பத்திகளை விருத்தி செய்யும் எங்களைப் போன்ற கூலித் தொழிலாளர்களுக்கு உதவ முன்வருவதில்லை.

எனினும் ஏ-9 வீதி திறக்கப்பட்டு போக்குவரத்துகள் நடைபெறுகின்றமையால், யாழ்ப்பாணத்திற்கே உரித்துடைய உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலைகள் அதிகரித்து காணப்படுகின்றமையானது நாம் மேற்கொள்ளும் உற்பத்திகளை மேலும் அதிகரிக்க ஊக்குவிப்பு தருகிறது.

மேலும் ஒரு கிலோ 75 ரூபாவிற்கு விற்கப்பட்ட புளுக்கொடியல் 240, 250 ரூபாவிற்கு விற்கப்பட்டதுடன் தற்போது ஒரு கிலோ 600-700 ரூபாவிற்கு விற்கப்படுகிறதெனவும்' அவர் தெரிவித்தார்.

பனைமரம் மனிதனின் எந்த முயற்சியுமின்றி தானே இயற்கையாக வளர்ந்து மனிதனுக்கு பயன்களும் இதன் மூலம் பல தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுக்கிறது. இலங்கையில் பெருமளவு பனை மரங்கள் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம், சுழிபுரம், தீவகம் பகுதிகளிலும் வன்னியின் பூநகரி பகுதிகளிலும் மன்னார் பகுதிகளிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றமையால் அதிகளவு பனம் பொருள் உற்பத்திகள் குடிசைக் கைத்தொழிலாக இப்பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.




ஈழம் மற்றும் இந்தியாவில் காணப்படும் பனைமரம் இனத்தை Borassus Flabellifer என்றும் ஆபிரிக்காவில் காணப்படும் பனை இனத்தை Borassus aenthipoun mart எனவும் கூறப்படுகிறது.

அத்துடன் இந்தியாவில் 60 மில்லியனும் மேற்கு ஆபிரிக்காவில் 50 மில்லியனும் இலங்கையில் 11.1 மில்லியனும் இந்தோனேசியாவில் 10 மில்லியனும் மடகஸ்காரில் 10 மில்லியனும் மியன்மாரில் 2.3 மில்லியனும் கம்போடியாவில் 2 மில்லியனும் தாய்லாந்தில் 2 மில்லியனும் காணப்படுவதெனவும் இலங்கையில் 10.5 மில்லியன் பனை மரங்கள் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சிப் பகுதிகளில் காணப்படுவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

யுத்தத்தின் போது தனது கணவனை இழந்து, 2 பெண் பிள்ளைகளுடன் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போராடும் வலிகாமம் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவர் தான் செய்யும் பனம் பொருள் உற்பத்தி தொடர்பாக கூறுகையில்;

'நான் கடந்த 15 வருடங்களாக பனம் பொருள் உற்பத்திப் பொருட்களை செய்கின்றேன். ஒரு நாளைக்கு 2 கடகம், அல்லது 2 சுளகு அல்லது 2 பாய்களை இழைக்க முடியும். இதனால், கடகம், பாய் என்றால் 200 ரூபாவும் சுளகு என்றால் 150 ரூபாவும் ஒரு நாளைக்கு பெறமுடியும்.



நான் பெறும் நாட்கூலித் தொகை முன்னைய காலங்களில் போதுமானவையாக இருந்தபோதும் தற்போது நாட்டில் நிலவியுள்ள பொருளாதார மாற்றத்திற்கு ஈடுசெய்ய முடியாதுள்ளமையினால் இத்தொழிலை விட்டு வேறு கூலித் தொழிலுக்குச் சென்று வேலை செய்தேன்.

இந்தக் கைத்தொழில் மீதிருந்த விருப்பத்தினாலும் ஏ-9 வீதி திறக்கப்பட்டுள்ளமையாலும் முன்னைய காலங்களை விட கூடியளவு வருமானத்தை ஈட்ட முடியுமென்ற நம்பிக்கையுடன் கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் மீண்டும் இத்தொழிலை மேற்கொண்டேன்.

நான் செய்யும் சுளகு, பாய், கடகம், பனம் கைவினைப் பொருட்கள் என்பனவற்றை ஏனைய மாகாணங்களில் சந்தைப்படுத்தி, யாழ்ப்பாண உற்பத்திப் பொருட்களுக்கு பெரும் கேள்வி நிலவ வேண்டும் என்பதே எனது ஆசை' எனவும் கூறினார்.

இதேவேளை, யுத்த காலங்களில் இராணுவத் தேவைகளுக்காக பாதுகாப்பு வலயங்கள் அமைப்பதற்காக பெருமளவு பனைமரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே தற்போது நிலவியுள்ள சாதாரண சூழ்நிலையினால் குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் அனைத்து வகைப் பொருட்களும் தென் மாகாணம் உட்பட ஏனைய மாகாணங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதால் நீண்ட கால இடைவெளிக்குப் பின் மீண்டும் இவ்வுற்பத்திப் பொருட்களுக்கு கிராக்கி தோன்றியுள்ளது.

எவ்வாறிருப்பினும் இயற்கைப் பொருட்களிலான கைத்தொழில் உற்பத்திகளில் வீழ்ச்சி கண்டு செல்லும் நிலை ஏற்பட்டு அரும் பொருட்களைச் சாலைகளில் பார்க்கக் கூடிய நிலைமையை ஏற்படுத்தாமல், சூழலுக்கு மாசற்றதும் அந்நியச் செலாவணியை ஈட்டித் தரக் கூடியதுமான பனை உற்பத்திகளை மேம்படுத்த அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும்.

**எச்.ஹுஸ்னா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாக்களின் மிகப் பெரிய வேலை எது?

வேலைக்குச் செல்லும் அம்மாக்களுக்கு அலுவலக வேலைப் பளுவைவிட, குழந்தைகளை பள்ளிக்கு அனுப்புவதுதான் மிகவும் மன உளைச்சல் தரும் விடயமாக உள்ளதாக ஒரு ஆய்வு முடிவு தெரிவிக்கிறது.

யுனேரோயல் டயர் நிறுவனம், லண்டனில் வேலைக்குச் செல்லும் 2000 அம்மாக்களிடம் ஒரு ஆய்வு நடத்தியது. இதில் 40 சதவீதம் பேர் அலுவலகத்திற்குச் சென்று இருக்கையில் உட்காருவதற்கு முன்பாகவே மன அழுத்தத்துக்கு ஆளாவதாகக் கூறி உள்ளனர். அலுவலக வேலையை விட குழந்தைகளை பள்ளிக்குத் தயார்படுத்தி அனுப்புவது மிகப்பெரிய வேலை என்கின்றனர் அவர்கள். குழந்தைகளை தூக்கத்திலிருந்து எழுப்புவது முதல் அவர்களுக்கு யூனிபோர்ம் போட்டு தயார்படுத்துவது வரை சவாலான விடயமாக உள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதைவிட, போக்குவரத்து நெரிசலையும் தாண்டி, குறிப்பிட்ட நேரத்தில் குழந்தைகளைப் பாதுகாப்பாக பள்ளிக்கு கொண்டுபோய் சேர்க்கும் விடயத்தில் தான் மிகுந்த கவலை அடைகின்றனர். இதன் காரணமாக காலை 8.25 மணிக்கு அம்மாக்களின் மனநிலை அதிக அளவில் பதற்றமாகக் காணப்படுவது தெரியவந்துள்ளது. மழை காலத்தில் மட்டும் குழந்தையைப் பள்ளியில் கொண்டுபோய் விடுவதாகவும் மற்ற நேரத்தில் அவர்களே நடந்து செல்வார்கள் என்றும் ஐந்தில் ஒரு அம்மா கூறி உள்ளார். இதனால் நடந்து செல்லும்போது விபத்து ஏதும் ஏற்படுமோ எனவும் அம்மாக்கள் கவலை அடைகின்றனர்" என யூனிரோயல் நிறுவனத்தின் டிரேசி ஹைம் தெரிவித்துள்ளார்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 18

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 6 | 7 | 8 | ■ | 9 | 10 |
| 11 | ■ | ■ | ■ | 12 | 13 |
| ■ | 14 | 15 | 16 | 17 | ■ |
| 18 | 19 | ■ | 20 | ■ | 21 |
| 22 | ■ | 23 | 24 | ■ | 25 |

**இடமிருந்து வலம்**

1. சீதையைக் கடத்திய இலங்கை மன்னன்
6. நட்சத்திரம் (குழம்பியுள்ளது)
9. சூரியன் என்றும் சொல்லலாம்
12. வீடு
14. ரஜினிகாந்த் நடித்த படம் (திரும்பியுள்ளது)
18. வீரமில்லாதவன் (திரும்பியுள்ளது)
23. தடி என்றும் சொல்லலாம்

**மேலிருந்து கீழ்**

1. இது வந்தால் பகல் வரும்
2. முன்னாள் நாயகி
3. பிரிவு என்றும் சொல்லலாம்
5. இளைஞன் (தலைகீழ்)
10. இது விதைத்தவன் இதுதான் அறுப்பான்
14. அரசன் என்றும் கூறலாம் (தலைகீழ்)
16. இது கூவும்
18. வறுமைப்பட்டவன் (தலைகீழ்)
21. வளையில் தங்கும்

### குறுக்கெழுத்துப்போட்டி - 16 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1. சேவல் | 1. சேய் |
| 4. தேன் | 2. நாவல் |
| 6. நாய் | 4. தேசம் |
| 8. சரி | 8. விருதகிரி |
| 11. விஷம் | 13. கோஷம் |
| 14. தரு | 17. ஆடை |
| 17. ஆடி | 18. கோடி |
| 21. கோடை | |
| 23. கிளை | |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

**வே.குமாரசாமி,**
கட்டைவேலி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

### பாராட்டுப்பெறுவோர்

01. ம.கஜகிருஷ்ணா,
இல. 136/4, கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

02. ச.கலைறஞ்சன்,
பத்திரகாளி கோவிலடி,
பொலிகண்டி கிழக்கு.

03. தில்லைநாதன் வருணியா,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

04. செ.ரவிசாந்,
விரமனை,
குப்பிளான்.

05. திருமதி ஏ.சர்மிளா,
இல. 620, நாவலர் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

உங்கள் விடைகளை
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................




## கிரிக்கெட் தகவல்கள்

* ஹரியானா ஹரிக்கேன் என்றழைக்கப்படும் கிரிக்கெட் வீரர் கபில்தேவ்.

* கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் கப்டனாக மிக இளம் வயதிலேயே இருந்தவர் மன்சூர் அலிகான் பட்டோடி வயது 21.

* இங்கிலாந்தில் உள்ள லோர்ட்ஸ் கிரிக்கெட் மைதானம் கட்டப்பட்டு 200 வருடங்களுக்கு மேலாகிறது.

* முதன்முதலாக கிரிக்கெட் விளையாட்டு இங்கிலாந்தில் தோன்றியது.

* இந்தியாவில் 18 ஆம் நூற்றாண்டில் கிரிக்கெட் விளையாட்டு அறிமுகமானது.

* பி.சி.சி.ஐ. எனப்படும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் 1928 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

## தெரிந்துகொள்ளுங்கள்!

* விஞ்ஞானி கலிலியோ தன் விஞ்ஞான ஆய்வுக்கு 'பைசா கோபுரத்தை'யே சோதனைக் கோபுரமாகப் பயன்படுத்தினார்.

* உலகின் மிகப்பெரிய காளைப் பந்தய மைதானம் மெக்சிகோ நகரத்தில் உள்ளது.

* ஹெலிகொப்டரின் இன்னொரு பெயர் 'விர்லி பேர்ட்'.

* பத்மஸ்ரீ விருது பெற்ற முதல் திரைப்பட நடிகை நர்கீஸ் தத்.

* தமிழ் நாடகவியலின் தந்தை என அழைக்கப்படுபவர் பம்மல் சம்பந்த முதலியார்.

* மிக வேகமாக ஓடும் பறவையினம் நெருப்புக் கோழி.

## விடுகதை

1. நீலக் கடலிலே வெண் பஞ்சு மிதக்குது. அது என்ன?
2. பற்கள் பல உண்டு. கடிக்க மட்டும் தெரியாது. அது என்ன?
3. பூவில் பிறக்கும், நாவில் சுவைக்கும். அது என்ன?
4. பாங்காய் இருப்பாள், பட்டென்று போவாள். அவள் யார்?
5. மண்ணில் பிறந்து, விண்ணில் மறையும். அது என்ன?
6. மண்ணுக்குள் பிறக்கும், மங்கையருக்கு அழகு தரும். அது என்ன?

1. மேகம் 2. சீப்பு 3. தேன் 4. மத்தாப்பூ 5. புகை 6. மஞ்சள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தின் திறவுகோல் இலக்கணம்

ஆதீனப் புலவர் மு.சிவசந்திரன்

தமிழ்மொழியின் சிறப்பு பல வகைகளில் உள்ளன. இதன் சிறப்பு படைப்பு நூல்களான இலக்கியங்களிலும் படைப்பு நூல்களின் படைப்பினைத் திறவுகோல் இட்டுத் திறக்கும் இலக்கணங்களிலும் மிளிர்கிறது.

இலக்கணம் கசப்பானதா? தேவையற்றதா? தள்ளவேண்டியதா? என்று பலரும் பலவாறாகச் சிந்திக்கும் வண்ணம் அதன் கடுமை அமைந்துள்ளது. முன்னோர்கள் மிகக் கடுமையாக இலக்கணக் கருத்துகளைக் கூறியுள்ளமைக்குக் காரணம் என்ன?

'இலக்கியம்' அறைக்குள் இருக்கும் வைரக்கல் என்றால் 'இலக்கணம்' அதனைப் பார்ப்பதற்குக் கதவைத் திறக்கத் துணை செய்யும் சாவி திறவுகோல் என்பதை இங்கு இரண்டு மேற்கோள்களால் விளக்கலாம்.

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்**
**நிலமிசை நீடுவாழ் வார்**

என்பது திருக்குறள் கடவுள் வாழ்த்து

நிலமிசை நீடுவாழ்வோர் யார் என்றால் இறைவனின் மாட்சிமை பொருந்திய திருவடியை இடைவிடாது நினைப்பவர்தான் என்பது இதன் கருத்து. இதில் இரண்டு சொற்கள் பூட்டுகள் போல் உள்ளன. ஒன்று 'ஏகினான்' என்பது மற்றொன்று 'சேர்ந்தார்' என்பது

இவ்விரண்டிலும் என்ன சிக்கல்கள் உள்ளன?

இறைவனைப் பற்றிய சொல்லின் கண் இறந்தகால குறிப்பு வரக்கூடாது. ஏனெனில் அவர் நேற்றும் இன்றும் நாளையும் இருப்பவர். முக்காலத்திலும் இருப்பவர். முக்காலங்களிலும் இருக்கும். ஒரு பொருளை நிகழ்காலச் சொல்லில் தான் கூறவேண்டும் என்பது இலக்கணம். எப்படியெனில் 'இமயமலை நிற்கிறது' 'கங்கை நதி ஓடுகிறது' என்று கூற வேண்டும். இமயமலை நிற்கிறது என்றோ நிற்கும் என்றோ கூறக்கூடாது. ஏனெனில் நின்றது என்றால் இன்றில்லை என்றாகிவிடும். நிற்கும் என்றால் நேற்று இல்லை என்றாகிவிடும். மேலும், சிந்திக்கும் போது இமயமலை நேற்றும் இன்றும் நாளையும் இருக்கும் பொருள் என்று கூற வேண்டுமானால் இமயமலை நிற்கிறது என்று கூறவேண்டும். அதே போலதான் கங்கை நதிக்கும்.

**முந்நிலைக் காலம் தோன்றும் இயற்கை**
**எம்முறைச் சொல்லும் காலத்து**
**மெய்ந்நிலைப் பொதுச்சொல் கிளத்தல் வேண்டும்**

என்றார் தொல்காப்பியர். இக்கருத்தை

**முக்காலத்திலும் ஒத்தியல் பொருளைச்**
**செப்புவர் நிகழுங் காலத் தானே**

என்றார். அதனால்தான் மாணிக்கவாசகர்

**எங்கள் பாண்டிப்பிரான் மூல பண்டாரம்**
**வழங்குகின்றான் வந்து முந்துமினே**

என்று வழங்குகின்றான் என நிகழ் காலத்தில் கூறினார்.

இத்தகைய அழுத்தமான இலக்கணங்கள் இருக்கும்போது திருவள்ளுவர் 'மலர்மிசை ஏகுகிறான்' என்று கூறாமல் 'ஏகினான்' என்று இறந்த காலத்தில் கூறியது பொருந்துமா? என்பதே இங்குள்ள சிக்கல். அதாவது பூட்டு இதனைப் பரிமேலழகர் அழகான ஒரு சாவியை திறவுகோலைத் தந்து விளக்கினார்.

மூன்று காலத்திலும் நிகழும் பொருளை நிகழ்காலத்தில்தான் கூற வேண்டும் என்று கூறிய தொல்காப்பியர் இன்னொரு நூற்பாவில் எப்பொழுதோ விரைவு காரணமாகவோ உறுதி காரணமாகவோ நிகழ்காலச் சொல்லையும் எதிர்காலச் சொல்லையும் இறந்த காலத்தில் கூறலாம் என்று வழுவமைதியும் கூறியுள்ளார்.

எப்படி என்றால் ஒரு நண்பன் வீட்டு வாசலில் வந்து நின்றுகொண்டு 'என்னப்பா இன்னும் புறப்படவில்லையா'? என்று கேட்கிறான். அப்போது உள்ளே இருக்கும் அவனது நண்பன் 'இதோ வந்துவிட்டேன்' என்று கூறினான். இவன் வரப்போகிறவன். எனினும் வந்துவிட்டேன் என்று இறந்தகாலத்தில் கூறலாமா என்றால் இங்கு விரைவும் உறுதிப்பாடும் தொனிக்க அவ்வாறு அவன் கூறியதை இலக்கணம் ஏற்றுக்கொள்கிறது.

நாம் வாழ்க்கையில் நேரத்திற்கு ஏற்ப பேசும் சொற்களுக்குக் கூட அது தவறாகும் என்றாலும், சரி என்று ஏற்றுக்கொள்ளலாம் என்று இலக்கணம் அமைதி கூறுகிறது. இதனை வழுவமைதி என்பர். இவ்வாறு சொற்களின் இலக்கணத்தை விட வாழ்க்கையின் போக்கும் நோக்கும்தான் அவசியமானது என்று இலக்கணம் ஏற்றுக்கொள்கிறது. இதற்குரிய நூற்பா.

**வாரக் காலத்தும் நிகழும் காலத்தும்**
**ஓராங்கு வரூஉம் வினைச் சொற் கிளவி**
**இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்**
**விரைந்த பொருள் என்மனார் புலவர்**

என்பது தொல்காப்பியம் வினையியல் நூற்பா. இங்கு வாராக்காலம் என்பது எதிர்காலம், நிகழுங்காலம் என்பது நிகழ்காலம்.

இறைவன் நம்பொருட்டு அழைத்த குரலுக்கும் அன்புக்கும் ஏற்ப ஓடோடி வருவான் என்னும் விரைவுப் பொருளில்தான் திருவள்ளுவர் 'ஏகுகிறான்' என்று நிகழ்காலத்தில் கூறவேண்டிய சொல்லை 'ஏகினான்' என இறந்த காலத்தில் கூறினார் என்று பரிமேலழகர் விளக்கினார். அவ்வுரைப்பகுதி வருமாறு;

'அன்பான் நினைவாரது உள்ளக் கமலத்தின் கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சேரலின் ஏகினான் என இறந்த காலத்தால் கூறினார். என்னை? வாராக் காலத்தும் நிகழும் காலத்தும் ஓராங்கு வரூஉம் வினைச் சொற் கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல் விரைந்த பொருள் என்மனார் புலவர் என்பது ஒத்ததாகலின்' என்பது அது.

நினைந்த வடிவோடு விரைந்து சேருவான் என்பதில் இரண்டு செய்திகளைக் கூறினார்.

விரைவாக வருவான் என்பது மட்டுமல்ல எந்த உருவில் நினைக்கிறோமோ அந்த உருவில் வருவான் என்பதால் இங்கு சமயக் காழ்ப்பிற்கு இடமில்லை என்றும் கூறினார். இந்த இலக்கணம் ஒரு மாண்புடைச் சாவி தானே!

இன்னொன்று சேர்ந்தார் என்பது சேர்தல் என்பது இடத்தால் சேர்தலா? இதயத்தால் சேர்தலா? என்பது கேள்வி. மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடுவாழ் வார் என்பதில் சேர்தல் என்பது இதயத்தால் சேர்தலைக் குறிக்கிறது. எண்ணத்தால் பக்தியால் உணர்வினால் சேர்தல் என்பது இதற்குப் பொருள். இது சாதகம் பயிற்சி இப்பயிற்சியை இடைவிடாது மேற்கொள்வார். அதாவது, தியானித்துக் கொண்டு இருப்பவர் நிலமிசை நீடு இனிது வாழ்வார் என்பதே பொருள்.

இதற்கு இலக்கணம் இடம் தருகிறது. தொல்காப்பியத்தில் வேற்றுமை மயங்கியல் என்ற இயலில் இரண்டாம் வேற்றுமை உருபு வரும்போது அந்த இடத்தில் ஏழாம் வேற்றுமை உருபும் வரலாம் என்று ஒன்றோடு ஒன்று கூடி வரும் இலக்கணம் கூறியுள்ளார்.

மயக்கம் என்றால் 'கூடுதல்' என்பது பொருள். வேற்றுமை மயக்கம் என்றால் பொருள் நிலைக்கு ஏற்ப உருபுகள் ஒன்றோடு ஒன்று கூடி வரும் என்பது பொருள். எடுத்துக்காட்டாக அரசனைச் சார்ந்தார். அரசர் கண் சார்ந்தார் என்பதில் அரசரைச் சார்ந்தார் என்பதில் இரண்டாம் வேற்றுமை உருபு 'ஐ'யும் அரசர் கண் சார்ந்தார் என்பதில் ஏழாம் வேற்றுமை உருபு 'கண்'ணும் அமைந்து பொருள் தருகின்றன. இதனை விளக்க வந்த தொல்காப்பியர் இவ்வாறு இரண்டு உருபுகள் இயைந்து பொருள் தருவது எப்போது என்றால் கருமம் அல்லாச் சார்புப் பொருள் வரும் பொழுது மட்டுமே என்று கூறியுள்ளார். கருமம் அல்லாச் சார்பு என்றால் செயல் தூணைச் சார்ந்தான் என்றால், அங்கு உடம்பினால் சார்தல் என்னும் செயல் நம் கண்ணுக்குத் தெரியும்.

ஆனால், அரசனைச் சார்ந்தான் என்றால் உடம்பினால் சார்தல் கிடையாது. அரசனை உள்ளத்தால் சார்ந்து நிற்கிறான் என்பதே பொருள். இங்கு செயல் என்னும் 'கருமம்' இல்லை. சிந்தனை என்னும் எண்ணம் உண்டு. இதுவே கருமமல்லாச் சார்பு என்றார் தொல்காப்பியர்.

மாணடி சேர்ந்தார் என்பதில் உள்ள 'சேர்தல்' என்பது இடத்தால் சார்தல் இல்லை. இதயத்தால் சார்தல் ஆகிய கருமமல்லாச் சார்பு எனப் பொருள்படும். எனவேதான், இங்கு சேர்தல் என்பது இடைவிடாது நினைத்தலை உணத்தியது என்கிறார் உரையாசிரியர்.

இவ்வாறு தெரிந்த குறளாக இருந்தாலும் தெரியாத சில நுட்பங்கள் பொருந்தி உள்ளன என்பதைப் புரிந்து கொள்ளவும் சில தடைகளுக்குச் சரியான விடைகளால் தெளிவுகொள்ளவும் இலக்கணம் என்னும் திறவுகோல் என்றும் உதவும்.

இலக்கிய சுவை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Saturday சினிமா



நயன்தாரா நடித்திருந்த தெலுங்கு படம் ஒன்றில் ஷீலாவுக்கும் முக்கிய வேடம்.போஸ்டரில் இவர் படத்தையும் போட்டிருந்தார்களாம். எள்ளும் கொள்ளும் வெடிக்கிறது நயன்தாரா முகத்தில். அவளும் நானும் ஒண்ணா? என்றாராம்.

புலி என்ற தெலுங்கு படத்தில் ஒரு பாட்டுக்கு ஆட சம்மதித்திருக்கிறார் ஸ்ரேயா. ரஹ்மானின் இசை என்பதால்தான் இந்தச் சலுகை.

நிச்சயதார்த்தத்துக்கு கோடம்பாக்க தோழிகள் யாருக்கும் அழைப்பு அனுப்பவில்லை ரம்பா. புளியங் கொம்பாச்சேன்னு புலம்பிட்டாங்கன்னா? என்ன செய்கிறது என்ற பயம்தான் காரணமாம்.

யோகி திரைப்படத்திற்குப் பிறகு அமீர் இயக்கும் படம் கண்ணபிரான் என்பது உறுதியாகிவிட்டது. முக்கிய புள்ளி ஒருவரின் தயாரிப்பில் ஜெயம் ரவி நடிப்பில் கதை, விவாதம் மிகத் தீவிரமாக நடந்து வருகிறதாம். நாயகி தேர்வும் நடந்து வருகிறது. அடுத்த மாதம் படப்பிடிப்பு தொடங்குகிறது. பிரபுதேவா–ஜெயம் ரவி இணையும் படம் தள்ளிப்போடப்பட்டு விட்டது. அநேகமாக முதல் காப்பி அடிப்படையில் அமீர் படத்தை தயாரித்து இயக்கலாம் என்ற பேச்சு அடிபடுகிறது. விரைவில் அதிகாரபூர்வ அறிவிப்பு வெளிவரும்.

## பாலாவின் 'அவன் இவன்'

நான் கடவுள் படம் மூலம் சிறந்த இயக்குநர் விருது பெற்ற பாலா தனது புதிய படத்தை அறிவித்துள்ளார். இந்தப் படத்துக்கு 'அவன் இவன்' என்று பெயர் சூட்டியுள்ளார் பாலா. ஆர்யா, விஷால் நடிக்கும் இந்தப் படத்துக்கு யுவன்ஷங்கர்ராஜா இசையமைக்கிறார். நந்தா படத்துக்குப் பிறகு யுவனுடன் கைகோர்க்கிறார் பாலா என்பது குறிப்பிடத்தக்கது. பாலாவின் பிற படங்கள் அனைத்திலும் இளையராஜாதான் இசையமைத்தார். இந்தப் படத்தின் நாயகியாக ஜனனி அய்யர் என்ற புதுமுகம் அறிமுகமாகிறார்.

ஆர்தர் வில்சன் ஒளிப்பதிவு செய்ய ஸ்ரீகர் பிரசாத் எடிட்டிங்கை கவனிக்கிறார். நான் கடவுள் படத்தில் ஜெயமோகனுடன் கைகோர்த்த பாலா, இந்தப் படத்தில் இன்னொரு பிரபல எழுத்தாளருடன் இணைகிறார். அவர் எஸ். இராமகிருஷ்ணன். இவர் ஏற்கனவே, பல படங்களில் வசனமெழுதி முத்திரை பதித்தவர். இலக்கிய உலகில் தனக்கென்று தனி வட்டத்தையே உருவாக்கி வைத்திருப்பவர். இந்தப் படம் வழக்கமான பாலா படமாக இல்லாமல் முற்றிலும் புதிய வடிவில் இளைஞர்களின் நாடித் துடிப்பை எகிற வைக்கும் படமாக இருக்கும் என பாலா குறிப்பிட்டுள்ளார்.

## விஜய்-சூர்யாவை மறந்துவிடுவேன் - அனுஷ்கா

வேட்டைக்காரன் வெற்றியா? தோல்வியா? இந்தக் கேள்வியை விஜயிடமோ, சன் குழுமத்திடமோ கேட்டிருந்தால் 'வரலாறு காணா வெற்றி... கிடைச்ச வசூலை எண்ணக்கூட நேரமில்லை' என்று கூறியிருப்பார்கள். கிட்டத்தட்ட அப்படித்தான் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.


இதே கேள்வியை படத்தின் நாயகி அனுஷ்காவிடம் கேட்டார்கள் சில நிருபர்கள். அதற்கு அம்மணியின் பதிலைக் கேட்டு அப்படியே அதிர்ச்சியடைந்து விட்டார்கள். வேட்டைக்காரன் குழு அந்தப் பதிலைக் கேட்காமல் போனார்களே என்ற குறைதான்... அப்படி என்ன சொன்னார் அனுஷ்கா?

வேட்டைக்காரன் வெற்றியா? தோல்வியா? என்று இப்போது எதற்குக் கேட்கிறீர்கள்... அதை படமெடுக்கும்போது யோசிக்க வேண்டும். இது வெற்றிப் படமாக வருமா... அதற்கேற்ப காட்சிகள் வைத்திருக்கிறோமா என்று அப்போது யோசிக்காமல் வெளியான பிறகு இது வெற்றிப் படமா, தோல்விப்படமா என்று ஆராய்வது வீண் வேலை. அந்தப் படத்தின் படப்பிடிப்பு முடிந்ததுமே அதை நான் மறந்துவிட்டேன். வேறு வேலை, வேறு படங்கள் என பிஸியாகிவிட்டேன். பொதுவாகவே நான் ஒரு படம் நடித்து முடித்ததும் அந்தப் படத்தில் நடித்த நாயகன் உட்பட அனைத்தையுமே மறந்துவிட்டு அடுத்த வேலைக்குத் தயாராகிவிடுவேன்... வெற்றியும் தோல்வியும் எனக்குப் பொருட்டல்ல... நடித்ததற்கு சரியாக காசு கொடுத்தால் சரி. அந்த வகையில் இப்போது நான் சிங்கம் என்ற தமிழ்ப் படத்தில் நடிக்கிறேன். இப்போது என் கவனமெல்லாம் இந்த ஒரு படத்தில் மட்டும்தான். சிங்கம் முடிந்ததும் அதையும் மறந்துவிடுவேன்' என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரீனாவுக்கு வந்த மர்ம பார்சல்



பொலிவூட் கவர்ச்சிக் கன்னி கரீனா கபூருக்கு தங்கம், வைர நகைகள் அடங்கிய மர்மப் பார்சல் வந்துள்ளது. இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். பொலிவூட்டின் சைஸ் ஜீரோ நாயகி கரீனா கபூர். சைப் அலிகானை காதலித்து வருகிறார். ஐஸ்வர்யா ராயை பின்னுக்குத் தள்ளி விட்டு பொலிவூட்டில் முன்னணியில் நிற்கிறார். விளம்பரப் படங்களிலும் இவர்தான் தற்போது முன்னணி. இவரது சம்பளம் ரூ.2 கோடி. மும்பையில் உள்ள கரீனா கபூரின் வீட்டுக்கு ஒரு மர்மப் பார்சல் வந்துள்ளது. அப்போது கரீனா வீட்டில் இல்லை. வெளிநாடு போயிருந்தார். அவரது உதவியாளர் பார்சலைப் பிரித்துப் பார்த்தபோது அதில் ஏராளமான தங்க, வைர நகைகள் இருந்ததைத் பார்த்து அதிர்ச்சியடைந்தார். ரூ.3 இலட்சம் மதிப்புள்ள வைர மோதிரம் ஒன்றும் ரூ.2 இலட்சம் மதிப்புள்ள தங்க நகை ஒன்றும் அதில் இருந்தது. ஒரு கடிதமும் வைக்கப்பட்டிருந்தது. அதில் நான் உங்கள் தீவிர ரசிகன். டுபாயில் இருந்து இந்த நகைகளை வாங்கி அனுப்பியுள்ளேன். அடுத்த படத்தில் இந்த நகைகளை அணிந்து நீங்கள் நடிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு இருந்தது. இதுபற்றி உடனடியாக கரீனா கபூரை தொடர்பு கொண்டு உதவியாளர் தகவல் தெரிவித்தார். அதிர்ச்சியடைந்த கரீனா உடனடியாக அந்தப் பார்சலையும் நகைகளையும் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். அதன்பேரில் பொலிஸாரிடம் இது ஒப்படைக்கப்பட்டது. இதை அனுப்பியது யார் என்று பொலிஸார் தற்போது விசாரணை நடத்தி வருகின்றனர்.



கோழி கொதிக்குது, கொதிகரண்டி மணக்குதுன்னு இல்லாம கண்ட செய்தியையும் எழுதி தொலைச்சுட்டு காரசாரமா திட்டும் வாங்க வேண்டியிருக்கேன்னு புலம்புது ஆந்திர ஊடகம். வேறொன்றுமில்லை. சார்மிக்கு கல்யாணம்னு எழுதிட்டாங்க. அதுதான் பிரச்சினையே. தேவி ஸ்ரீ பிரசாத்துக்கும் இவருக்கும் லவ். இருவருமே அதை இல்லை என்று மறுத்தாலும் அரசல் புரசலா சந்திப்புகளும் சந்தோசங்களும் நடந்துகிட்டுதான் இருக்கு என்கிறார்கள். இந்த நேரத்தில் பஞ்சாப் கோதுமையான சார்மிக்கு அதே ஊரிலேயே மாப்பிள்ளை ரெடியாகிவிட்டார் என்று செய்திகள் கசிந்தன. உண்மையா, பொய்யா என்று அவரிடம் கூடக் கேட்காமல் அவசரப்பட்டு கொட்டை எழுத்தில் கொளுத்தி போட்டுவிட்டனர். இதையெல்லாம் ஒரு பிரச்சினையாக கருதாத சார்மி, அவர்கள் எழுதிய ஒரு விடயத்திற்காகத்தான் ஆத்திரப்பட்டிருக்கிறார். 'திருமணத்திற்குப் பிறகு சினிமாவுக்கு முழுக்கு' இதுதான் சார்மியை அதிர வைத்த வரிகள். எனக்கு இப்போ கல்யாணமும் இல்ல சினிமாவுக்கு முழுக்குப் போடப் போவதும் இல்ல. நான் தெலுங்கில் பிஸியா நடிச்சிட்டு இருக்கேன். இந்த நேரத்தில எதுக்குக் கல்யாணம் பண்ணனும் என்று எதிர்க்கேள்வி கேட்டிருக்கிறார்.



நிகழ்வொன்றுக்கு வந்திருக்கும் ஜோதிகாவும் அவரது மகளும்

பொங்கலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட இரும்புக்கோட்டை முரட்டு சிங்கம் மார்ச்சுக்கு தள்ளிப் போய்விட்டது. தேர்வு நேரங்களில் படத்தை வெளியிட்டால் சிக்கலாகும் என்பதால் விடுமுறை காலங்களில் வெளியிடலாம் என்றாராம் இயக்குநர் சிம்பு தேவன். கல்பாத்தி அகோரம் தயாரித்திருக்கும் மேலும் இரு படங்களும் அதே மாதத்தில் வெளிவருவதால் கையை பிசைந்து நிற்கிறார்கள் சிறு படங்களை எடுத்தவர்கள்.

நடிச்சு ஒரு படம்தான் வந்திருக்கு. அதுக்குள்ளே என்னைப் பற்றி வதந்தி வருது. என்ன பண்ணுறது என்று வருந்துகிறார் அனன்யா. சும்மாயிருங்க...!

# நடிப்புக்கு ஓய்வு கொடுக்கும் நயன்



நயன்தாராவின் தனிப்பட்ட வாழ்க்கையும் சரி, நடிப்பு வாழ்க்கையும் சரி... பலமான ஆட்டங்கண்டு போயுள்ளது. இதனால், நடிப்புக்கு தற்காலிக ஓய்வு கொடுத்துள்ள நயன் இன்னும் சில மாதங்களுக்கு எந்தப் படத்திலும் நடிப்பதில்லை என முடிவெடுத்துள்ளாராம். ஆரம்பத்தில் தும்மென்ற கேரள அழகியாகக் காட்சி தந்த நயன்தாரா போகப் போக மெலிந்து களையிழந்து காட்சியளிக்கத் தொடங்கினார். இதனால் அவருடன் நடிக்கும் நாயகர்களை விட வயதானவராகத் தெரிந்தார் நயன்தாரா. இந்த நிலையில் தமிழில் சமீப காலத்தில் அவர் நடித்த எல்லாப் படங்களும் தோல்வி கண்டன. இப்போது ஆர்யாவுடன் பாஸ் என்கிற பாஸ்கரன் படத்தில் மட்டுமே நடிக்கிறார் நயன்தாரா. தெலுங்கில் ஜூனியர் என்.டி.ஆருக்கு ஜோடியாக அதுர்ஸ் என்ற படத்தில் நடித்தார் நயன்தாரா. அந்தப் படமும் சுமாராகத்தான் போகிறது. மலையாளத்தில் நடித்த பாடிகார்ட் படமும் பெரிதாகப் பேசப்படவில்லை.

எனவே, நடிப்புக்கு கொஞ்ச நாள் ஓய்வு கொடுத்துவிட்டு உடம்பில் கவர்ச்சியை ஏற்றும் முயற்சியில் இறங்கத் திட்டமிட்டுள்ளாராம் நயன்தாரா. அவருக்கு ப்ரியமானவரும் இதுதான் சரியான முடிவு என்று கூறிவிட்டதால் சொந்த ஊரான கேரளா சென்று புத்துணர்வு சிகிச்சைக்கு தயாராகிவிட்டாராம் நயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வார மெயிலில் இவர்...



# இளையராஜா

உலக இசை ரசிகர்களிற்கு கிடைத்த வரப்பிரசாதமாக இன்று வரை திகழ்ந்து கொண்டிருக்கும் இசைஞானி இளையராஜா 2010 ஆம் ஆண்டுக்குரிய பத்மபூஷண் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதன் மூலம் அவரது திறமைக்கும் படைப்புகளுக்கும் மக்கள் எந்த அளவுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார்களென்பதை காண முடிகின்றது.

இந்தியாவின் அதியுயர் விருதான பத்மபூஷண் விருதுக்கு இம்முறை இசைத்துறையிலிருந்து இசைஞானி இளையராஜாவும், ஏ.ஆர். ரஹ்மானும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

மிகவும் எளிமையான குடும்பமொன்றில் தமிழ் நாட்டின் தேனி மாவட்டம் பண்ணைபுரத்தில் 1943 ஜூன் இரண்டாம் திகதி பிறந்த இளையராஜாவின் இயற்பெயர் ஞானதேசிகன்.

இயற்பெயரில் ஞானம் என்ற பதம் இணைந்திருந்தமையாலேயோ என்னவோ சிறுவயது முதலேயே இளையராஜாவுக்கு இசையில் ஞானம் இருந்துவந்தது.

அதன் தொடர்ச்சியாகத்தான் பின்னர் அவர் இசைச் சிகரமாக திகழும் நிலையில் இசைஞானி என்ற அற்புதப்பட்டம் இளையராஜாவுக்கு கலைஞர் கருணாநிதியால் வழங்கப்பட்டது.

பண்ணைய புரத்தில் ராமஸ்வாமி சின்னத்தாயம்மாள் தம்பதிகளுக்கு புதல்வராகப் பிறந்த இளையராஜா சிறுவயது முதலே இசையில் ஆர்வம் காட்டியதன் தொடர்ச்சியாக நாட்டுப்புற பாடல்களில் ஆரம்பகாலத்தில் ஆர்வம் காட்டினார்.

பின்னர் தனது வளர்ப்பு சகோதரர் பாவலர் வரதராஜனால் நடத்தப்பட்ட நடமாடும் இசைக்குழுவில் தனது 14 ஆவது வயதில் இணைந்து கொண்ட இளையராஜா அதன் மூலம் தென் இந்தியா முழுவதுக்கும் சென்று தனது இசைத் திறமையை வெளிக்காட்டி இருந்தார்.

இவ்வாறாக இசைப்பயணம் தொடர்ந்து கொண்டிருந்த நிலையில் சென்னையில் 1968 இல் பேராசிரியர் தனராஜை தனது குருவாக்கி இசையை முறையாகப் பயில ஆரம்பித்தார்.

அதனைத் தொடர்ந்து 1970 களின் பிற்பகுதியில் இசைக் குழு ஒன்றில் கிற்றார் வாத்தியத்தை வாசிக்க ஆரம்பித்தார். பின்னர் புல்லாங்குழல், ஓகன், ஆர்மோனியம், உள்ளிட்ட இசைக் கருவிகளையும் வாசித்தார்.

பின்னர் ஜி.கே.வெங்கடேசன் குழுவில் இளையராஜாவின் இசைக் கச்சேரிகள் அரங்கேறின.

இவ்வாறாக தனது இசைப் பயணத்தை மேற்கொண்டிருந்த இளையராஜாவுக்கு விடிவெள்ளியாக 1976 இல் பஞ்சு அருணாசலத்தின் அன்னக்கிளிக்கு இசை அமைக்கும் வாய்ப்பு கிட்டியது. அன்று ஆர்மோனியத்தையும் ஓகனையும் தொட்ட இளையராஜாவின் கைகள் தொடர்ந்து இன்று வரை இசை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

தொடர்ந்து 1980 களின் ஆரம்பம் முதல் தனது திறமையால் இசை ரசிகர்களை தன்பால் வசப்படுத்தி இசையின் உச்சக் கட்டத்திற்கே அழைத்துச் சென்று அதனை அனுபவிக்கவைத்த பெருமை இளையராஜாவையே சாரும்.

தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, கன்னடம், மலையாளம், தெலுங்கு என பல மொழிகளுக்கு தனது இசையை அர்ப்பணித்திருந்த இளையராஜா ஆங்கில இசை அல்பங்களையும் வெளியிட்டிருந்தார். ஆங்கில இசை அல்பத்தில் கௌ டு நேம் இற் என்ற தொகுப்பு பிரபலமானது.

அத்துடன் 1993 இல் உருவாகிய சிம்பொனியும் இளையராஜாவின் இசை மகுடத்தில் மின்னும் வைரமாக உள்ள அதேவேளை, 2005 இல் வெளியான திருவாசகம் எனும் தொகுப்பும் மிகப்பிரபலமான தொகுப்பாகும்.

அத்துடன் தளபதி படத்திற்காக இளையராஜா [illegible] ராக்கம்மா கையைத் தட்டு என்ற இவரது பாடல் உலக இசை வெளியீடுகளின் முதன் பத்துப் பாடல்களுள் அடங்கியமையும் நாயகன் திரைப்படம் டைம் சஞ்சிகையின் உலக சினிமா தரப்படுத்தல்களுக்குள் உள்வாங்கப்பட்டமையும் இவரிற்கு கிடைத்த பெரு வெற்றிகளாகும்.

இவ்வாறாகத் தனது இசைப்பயணத்தை பல சாதனைகள் நிகழ்த்திய வண்ணம் தொடர்ந்து கொண்டிருக்கும் இளையராஜா இதுவரை 900 படங்களைச் சேர்ந்த 4500 பாடல்களுக்கு 30 வருட காலப்பகுதியில் இசை அமைத்துள்ளார்.

தமிழ் சினிமா வரலாற்றில் பலராலும் பேசப்படும் சிந்து பைரவி என்ற படத்திற்காக இசையமைத்தமைக்காகவும் ருத்ரவீணை [தெலுங்கு], சாகர சங்கமம் [தெலுங்கு] ஆகிய படங்களுக்கு இவருக்குத் தேசிய விருது வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாமல் மேலும் பல மாநில விருதுகள் வழங்கப்பட்டது.

அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கௌரவ டாக்டர், அமெரிக்க உலக பல்கலைக்கழக வட்டமேசையினால் இசையின் தத்துவவியல் துறையில் டாக்டர் பட்டம், காமராஜர் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம், வட அமெரிக்க தமிழ் சங்கத்தின் விருது, அமெரிக்காவின் கௌரவ குடியுரிமை என்பன இசைஞானி பெற்ற பட்டங்களாகும்.

இவ்வாறாக தனது இசைப்பயணத்தை தொடர்ந்த இளையராஜாவுக்கும் அவரின் இசைக்குழுவில் கீபோர்ட் கலைஞராகப் பணிபுரிந்து தற்போது இசைப்புயலாகியுள்ள ஏ.ஆர்.ரஹ்மானுக்கும் இம்முறை பத்மபூஷண் விருது வழங்கப்பட்டுள்ளது.

வழமையில் பட்டங்கள் பெறுவதன் மூலம் மனிதர்கள் தான் பெருமை அடைவார்கள்.ஆனால் இம்முறை இளையராஜாவுக்கு இவ்விருது கிடைக்கப் பெற்றிருப்பதால் பத்மபூஷண் விருது பெருமை அடைந்து விட்டது என்று கூறிக் கொண்டால் மிகையாகாது.


இப்பெருமைக்குரிய இளையராஜா வாழ்ந்து கொண்டிருக்கும் சமயத்தில் நாமும் வாழக் கிடைப்பது எமக்கு கிடைத்த மிகப்பெரிய வரம்.


இளையராஜா எனும் இந்த இசைச் சிகரத்திலிருந்து முடிவிலாது உற்பத்தியாகும் அருவிகளை அள்ளிப் பருகும் ரசிகர்களின் தாகம் தணியவும் கூடாது. அவரின் படைப்புகளும் பல்லாண்டு காலம் தொடரவேண்டும்.


வாழ்க அவர் இசைப்பணி, வளர்க அவரது இசைப்பயணம்.

**யோ. நிமல்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரிக்க... சிந்திக்க...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழி நீ ஒரு தொடர்கதை...

தோழி!
நீ வானத்தின் செல்வி மேகலா
உன் வாழ்க்கையே ஒரு
சிதம்பர ரகசியமே
நாணல் போன்ற உன்
சிறு சிறு நம்பிக்கைகள்
புதுயுகம் ஒன்றைப் படைக்கு
மடி!
நீ நான் அவள் மூவரும்
சேர்ந்து பழகிய அந்நாட்கள்
இப்போதும் என் மனதில்
மெட்டி ஒலிபோல் ஒலிக்கிறதே
நண்பி!
நாம் பழகிய அந்தக்
கனாக்காணும் காலங்கள்
அனைத்தும்
எப்போதும் நெஞ்சினில் நிற்கும்
உன் திறமைச் சித்திகளைக்
கண்டு
இன்றும் நான்
ஆனந்தம் கொள்கிறேனடி..
தெக்கத்திப் பெண்ணாக நீ
கண்ட கோபங்கள்-மனதில்
பல கோலங்கள் போட வைத்
தது!
எந்த நதி எங்கே போகிறது என
யாரறிவார்-எனினும்
கடலோடு சங்கமிக்கும் நதி
போல
நட்போடு நாம் சங்கமித்திட்
டோம்!
நம் கல்வியும் விக்கிரமாதித்தன்
கதைபோல் தொடர்ந்து கொண்
டுள்ளதடி!
உன் தாமரை முகத்திலே
பல வேதனைகள் புதைந்திருப்
பதை
ஆனால்,அதுமட்டும் ரகசியமா
கவே
உள்ளதடி
உன் வாழ்வில் என்றுமே
வசந்தம் வீசிட
மலர்கள் பல தூவி
மனமார நான் என்றும்
சிவசக்தியை வேண்டி
அர்ச்சிக்கிறேனடி!
நீ எல்லோர் மனதிலும்
அரசியாக கலசம் ஏந்தி
என்றுமே வீற்றிருக்கின்றாய்
ஏழு ஜென்மங்கள் எடுப்பினும்
நம் நட்பு எனும் இப்பந்தம்
என்றுமே அழியாதபடி!
உன்னைக் கவியிலே புனைந்
தேன்
ஆதலால்
தோழி நீ
தொடர்கதையாகிவிட்டாய்...

**கௌதமி.யோ**
**சுதுமலை வடக்கு,**
**மானிப்பாய்.**




# அறுவடை செய்ய முடியாத அபூர்வ நெற்பயிர்கள்

என் அன்புத் தங்கமே!
இந்த நிலாவை உன்
இதய வானத்தில் உலாவ
இடமளித்த செல்வமே!
எப்படியிருக்கின்றாய்?
எந்த நெருக்கடி வேளையிலும்
உன் நினைவோடுதான்
எந்தன் பொழுது விடிகின்றது...
உன்னோடு அரங்கேற்றிய
அந்தப் பொன்னாட்களாகிய
நாடகங்களை நினைத்துப்
பார்க்கையில் கண்களில்
ஆறாய் நீர் வடிகின்றது...
'எனக்கு' நெருங்கியவர்களால்
எங்கள் புனித உறவு ஏற்றுக்
கொள்ளப்படவில்லை,
ஆனால்...
எவராலும் நிராகரிக்க
முடியாத—உன்
நினைவுகள் என்னுள் பசிய
நெற்பயிர்களாய்
வளர்ந்த வண்ணம் உள்ளன!
இது அறுவடை செய்யப்பட
முடியாத
அபூர்வ நெற்பயிர்கள்...

**கவிக்குயில்**

# கனவின் நிலவு

கருஜாமம் விழித்திரையில்
அரற்றினாள் கனவாக-அவள்
நிசப்தம் ஈடாயிருக்க வேண்டும்
அது தான்
பதில் கனவாக வந்தாளோ
நான் காணாது
சில நாளாவது அசைந்திருக்கும்
முன்பும் அப்படித் தான் -என்
ஜன்னலருகே
பூ...பூவாய் புன்னகைத்தாள்
விரைந்தபோது
சில ஓநாய்களே-என்
காட்சியில் மோதின
நிஜமில்லா
ஓர் கொடுமை தெரியுமா?
அந்த விகாரமாய் தான்
இந்தக் கனவின்
சிரசறுத்து
விக்கி எழும்புகின்றேன்
எவ்வளவு ஏமாற்றம்
என்ன ஓர் முட்டாள்தனம்
பதினைந்து
நாள் அமாவாசை
நிச்சயமா எனக்குத் தெரியாது.

**சா.ரமேஷ்குமார்**
**மீசாலை கிழக்கு.**

# என் குடும்பம்

சீரியல் பாப்பதற்காய்...
அம்மாவுக்கு-ஒரு
தொலைக்காட்சிப் பெட்டி
நிம்மதியாய் உறங்கிக் கொள்ள...
வயதாகிப் போன என் அப்பாவுக்கு
ஒரு மின்விசிறி.
அக்கா அரட்டை அடிக்க...
நொக்கியா செல்போனும்
தனிமையாய்த் தூங்க ஏசிறூமும்
தம்பிக்கு கடைசியாய் வந்த...
கம்யூட்டரும்
கலர் கலரான மின்குமிழ்களும்
தங்கச்சிக்கு கட்டாயம்...
தேவையான-ஒரு
மின் அழுத்தி.
வேலைக்காரிக்கு
வோஷிங் மிசினும்-கூடவே
கிரேண்டரும்.
எனக்கு என்ன தெரியுமா...?
மாதம் முடிவில் வீடு தேடி வரும்
மின்வரி பில் மாத்திரமே...

**வி.முகிலன்**
**நெடுந்தீவு-13.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமோனால்
'Saturday மெயில்'
இல. 336, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...




# உன் வரவுக்காக...

உன் வரவை நினைத்து
சுமைகளும் சுகங்களாகின
யன்னலில் புது வசந்தம் வீசியது
வாசலும் புதுக்கோலம் கொண்டது
இதயமும் புத்துணர்ச்சி பெற்று
வருடல்களின் வக்கிரத்தில்
சுகம் கண்ட வேளை
திடுக்குற்று விழித்தபோது தான்
யாவும் கனவுகளே நொந்தேன்.

**எஸ்.நிஷாந்தினி**
**110/2, ராசாவின்**
**தோட்டம், அத்தியடி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் இறந்து இரு ஆண்டுகளின் பின்னர் இரட்டைக் குழந்தைகள் பெற்றெடுத்த பெண்



பிரிட்டனில், திருமணமான இரண்டாவது நாளே கணவனை இழந்த பெண், இரண்டு ஆண்டுகளுக்கு பின் தற்போது இரட்டைக் குழந்தைகளைப் பெற்றுள்ளார்.

பிரிட்டனைச் சேர்ந்தவர் கெல்லி போவன் (வயது 25), இவரது கணவர் கெவின் போவன் இவருக்குக் கடந்த 2006 ஆம் ஆண்டு திடீரென இடுப்பு எலும்பும் தொடையும் சேரும் இடுக்குப் பகுதியில் கடும் வலி உண்டானது. மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்ததில் அவருக்கு எலும்பு புற்றுநோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. புற்றுநோய்க்கான சிகிச்சை மூலம் கெவின் போவன், தந்தையாகும் வாய்ப்பு பாதிக்கப்படலாம் என டாக்டர்கள் தெரிவித்தனர். எனவே, புற்றுநோய்க்கான ' கீமோ தெரபி ' என்ற கதிர்வீச்சு சிகிச்சை துவங்குவதற்கு முன் டாக்டர்கள் கெவின் போவனின் விந்தணுவை சேகரித்து உறைய வைத்து பாதுகாத்தனர்.


கடந்த 2007 ஆம் ஆண்டு செயற்கை கருத்தரிப்பு முறையில் கெல்லி போவன் ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தார். அந்தக் குழந்தைக்கு ஷாய் என்று பெயரிட்டனர். இதற்கிடையில் கெவின் போவனுக்கு புற்றுநோய் நுரையீரல் வரை பரவியது. அதுவரை திருமணம் செய்யாமல் வாழ்ந்து வந்த இருவரும் கடந்த 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திருமணம் செய்து கொண்டனர். திருமணம் நடைபெற்ற இரண்டாவது நாள், கெவின் போவன் காலமானார். கெவின் போவன் காலமாகி இரண்டாண்டுகளான நிலையில், தற்போது கெவின் போவனின் உறைய வைக்கப்பட்ட விந்தணுக்களைப் பயன்படுத்தி செயற்கை கருத்தரிப்பு மூலம் இரட்டைக் குழந்தைகளைப் பெற்றெடுத்துள்ளார்.

இதுகுறித்து கெல்லி போவன் கூறியதாவது;

புத்தாண்டை ஒட்டி, எனக்கு ஆண் மற்றும் பெண் என இரட்டைக் குழந்தைகள் பிறந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. குழந்தைகளுக்கு சேசீ மற்றும் ரூபி எனப் பெயரிடப்பட்டுள்ளது. கெவின் இறப்பதற்கு முன்னரே, எங்கள் முதல் பையன் ஷாய்க்கு தங்கை அல்லது தம்பி வேண்டும் எனத் தீர்மானித்தோம். ஆனால், அவர் விரைவில் இறந்துவிட்டார். அதன் பின், செயற்கை கருத்தரிப்பு முறையில் குழந்தை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தேன். முதல் இரண்டு முறை செயற்கை கருத்தரிப்பு முறை முயற்சித்த போது வெற்றிபெறவில்லை. மூன்றாவது முறையே வெற்றி கிடைத்தது, தற்போது இரட்டைக் குழந்தைகளும் பிறந்துள்ளன.

# உயிர் எடுக்கும் வெண்ணெய்





வெண்ணெய் மற்றும் பிற உயர் கொழுப்பு வகை உணவுகளைத் தடை செய்வதால் ஆண்டுக்கு 3,500 பேரின் உயிரைக் காக்க முடியும் என பிரிட்டனின் பிரபல இதய அறுவை சிகிச்சை நிபுணர் ஷியாம் கோல்வெகர் கூறியுள்ளார்.

லண்டன் யூனிவர்சிட்டி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நிபுணராக பணி புரிபவர் ஷியாம் கோல்வெகர். அவர் கூறிய கருத்துகளை இண்டிபெண்டன்ட் பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு;

எளிதில் கிடைக்காத உணவு வகைகளைத் தேடிப்பிடித்து மக்கள் வாங்கிச் சாப்பிடுவதில்லை. எளிதாகக் கிடைக்கிற எளிதில் தயாரிக்கக் கூடிய உணவு வகைகளைத்தான் விரும்புகிறார்கள். அந்த வகையில் மக்களுக்கு எளிதாகக் கிடைப்பது ரொட்டியும் வெண்ணெயும். இரண்டு ஸ்லைஸ் ரொட்டி, கொஞ்சம் வெண்ணெய், அத்துடன், தடவிக்கொள்ள ஏதாவது கிரீம் அல்லது ஜாம் அவர்களுக்குப் போதும். இந்த வகை காலை உணவில் ஒருவருக்கு 16.1 கிராம் உயர் கொழுப்பு கிடைக்கிறது.

ஒருவர் நாளொன்றுக்கு உயர் கொழுப்பு வகைகளை 20 கிராம் வரை சாப்பிடலாம். அதனால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. ஆனால், காலை உணவில் மட்டும் 16.1 கிராம் கொழுப்பு சாப்பிடும் ஒருவர், நிச்சயம் மற்ற இரண்டு வேளை உணவிலும் கொழுப்பை அதிகமாகச் சாப்பிடும் நிலை ஏற்படுகிறது.

அதேநபர் காலை உணவில் [illegible] வெண்ணெய்க்கு மாற்றான ஒன்றை ரொட்டித் துண்டுகளின் மேற்பரப்பில் தடவிக்கொண்டால் அவர் உண்ணும் கொழுப்பின் அளவு 92 சதவீதம் குறைகிறது. இந்த வகையில் சாப்பிடும் ஒருவர் நாளொன்றுக்கு உட்கொள்ளும் கொழுப்பின் அளவை 8 கிராம் வரை குறைக்கலாம். இதற்கு அரசு தான் உதவ வேண்டும். வெண்ணெய் போன்ற உயர் கொழுப்பு வகை உணவுப் பொருட்களைத் தடைசெய்ய வேண்டும். இதனால் இதயநோய்களைக் குறைக்கலாம். பிரிட்டனில் பெரும் ஆட்கொல்லியாக விளங்குவது இதய நோய்தான். அதற்குக் காரணம் கூடுதலான கொழுப்புள்ள உணவு வகைகள் தான். வெண்ணெய் போன்ற உயர் கொழுப்பு வகைகளைத் தடை செய்தால் ஆண்டுக்கு சுமார் 3,500 உயிர்களைக் காக்க முடியும்.

எங்களிடம் சிகிச்சைக்குப் பலர் வரும் பொழுது நாங்கள் உதவி எதுவும் செய்ய முடியாத நிலையில்தான் வருகிறார்கள். கொழுப்பில்லாத எளியவகை உணவுக்கு மாறுவது அவர்களுக்கு பெரிய உதவிகரமான வழியாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை இரத்த செல்கள் தயாரிப்பு

உடல் இயக்கத்தில் பெரும் பங்கு வகிப்பது இரத்தம். நாம் உண்ணும் உணவு, பல மாறுதல்களுக்குப் பிறகு இரத்தமாக மாறுவது இயற்கை வினோதங்களில் உச்சமாகும்.

ஆபத்துக் காலத்தில் உயிரைத் தாங்கிப் பிடிப்பதில் இரத்தம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனாலும், இரத்தப் பிரிவுகள் வேறுபடுவதால் எல்லோருக்கும் தேவையான இரத்தம் உடனடியாகக் கிடைப்பதில்லை. இதற்காக இரத்தத்தை உறைய வைத்தல், தனித்தனி இரத்த செல்களாக பிரிப்பது என பல வழிகளில் இரத்தத்தைப் பிரித்து சேமித்து பயன்படுத்துகிறோம்.

விஞ்ஞான வளர்ச்சியில் இரத்த செல்களை வளர்த்து செயற்கையாக இரத்தம் உருவாக்கும் முயற்சிகளும் நடந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக தற்போது செயற்கையாகவே இரத்த செல்கள் உருவாக்கப்பட்டு சாதனை படைக்கப்பட்டு உள்ளது. இந்த இரத்த செல்களை உருவாக்கியவர் அமெரிக்க வாழ் இந்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பொறியியல் வேதியல் பிரிவு பேராசிரியராக பணியாற்றி வரும் சாமிர் மித்ராகோத்தரி என்பவர் தான் இந்த இரத்த செல்களை உருவாக்கி உள்ளார். இவர் 1992 ஆம் ஆண்டில் மும்பையில் கெமிக்கல் என்ஜினீயரிங் படித்தவர் ஆவார்.

இவர் உருவாக்கி இருப்பது, இரத்த சிவப்பணுக்களாகும். இது 90 சதவீத அளவில் இயற்கை இரத்த செல்கள் போலவே செயற்படுகிறது. மிருதுவானதாகவும், நெகிழும் தன்மையுடனும் இருப்பதோடு ஒக்சிஜனை எடுத்துச் செல்வதிலும் சிறப்பாக பணியாற்றுகிறது.

இந்தக் கண்டுபிடிப்பு இரத்தத் தேவையை நிறைவேற்றும், நோய் எதிர்ப்புத் தன்மையுடன் கூடிய இரத்தமாக உட்செலுத்தும் புதிய மருத்துவ முறையாகவும் பயன்படும் என்று தெரிகிறது.

மித்ராகோத்தரி, ஏற்கனவே சிறப்புத் தன்மை கொண்ட பாலிமரை உருவாக்கி சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.



# நிலக்கரி எரிவது ஏன்?


நிலக்கரி ஏன் எரிகிறது? காரணம் அதில் 'கார்பன்' உள்ளது. நிலக்கரி எரியும் போது அது வெப்ப வடிவில் சக்தியை வெளிப்படுத்துகிறது. அந்த வெப்ப சக்தியை மின்சாரம் தயாரிக்க உபயோகப்படுத்த முடியும். மின்சார உற்பத்தி நிலையத்தில், நிலக்கரியை எரிப்பதன் மூலம் நீராவி உண்டாக்கப்படுகிறது. அந்த நீராவி சுழல் இயந்திரத்தின் (டர்பைன்கள்) பெரிய இயந்திர உருளைகளைச் சுழலச் செய்கிறது. அவை மின்சார இயந்திரங்கள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. நிலக்கரியைப் பயன்படுத்தியே உலகில் அதிகமான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

'ஆந்த்ராசைட் நிலக்கரி' என்பது நிலக்கரிகளிலேயே மிகவும் கடினமானதாகும். இதில் 90 சதவீதம் 'கார்பன்' இருக்கும். நிலக்கரிகளிலேயே மிகவும் தரமான இது தறைவான சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்தும். ஆனால் பூமிக்கடியில் மிதந்த ஆழத்தில் தான் இது கிடைக்கும் என்பதால் விலை அதிகமாக இருக்கும்.

மின்னுற்பத்தி நிலையங்களும், தொழிற்சாலைகளும் பொதுவாக 'பிட்டுமினஸ் நிலக்கரி'யைப் பயன்படுத்துகின்றன. அவற்றில் 70 முதல் 85 சதவீதம் கார்பன் உள்ளது.

நிறத்தின் காரணமாகப் 'பழுப்பு நிலக்கரி' என்று அழைக்கப்படும் 'லிக்னைட்' 60 சதவீதத்துக்கும் தறைவான கார்பனைக் கொண்டுள்ளது. இது தறைவான வெப்பத் திறன் உடையது. எனவே தேவையான வெப்பத்தைப் பெற அதிகமான பழுப்பு நிலக்கரியை எரிக்க வேண்டியிருக்கும்.

# விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்





# வெடிகுண்டுகளை மோப்பம் பிடிக்கும் மின்சார நாய்

சாதாரண கருவிகளால் 'ஆர்.டி.எக்ஸ்.' போன்ற அதிநவீன வெடிகுண்டுகளைக் கண்டுபிடிக்க முடியாது. அதற்குத் தீர்வு காணும் வகையில் இந்திய விஞ்ஞானிகள் ஒரு மின்சார நாயை உருவாக்கி வருகிறார்கள்.

இதுதொடர்பாக 'இந்திய அறிவியல் காங்கிரஸில்' பேசிய மும்பை ஐ.ஐ.டி. பேராசிரியர் ராம்கோபால் ராவ், 'வெடிகுண்டுகளைச் சற்றுத் தூரத்தில் இருந்தே மோப்பம் பிடிக்கும் நாய் போன்ற தோற்றம் கொண்ட ஓர் உபகரணம் மேம்படுத்தப்பட்டு வருகிறது' என்று தெரிவித்தார். இந்த உயர்நுட்ப உபகரணத்தை சண்டிகரில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் [டி.ஆர்.டி.ஓ.], மெட்ராஸ் அணு சக்தி நிலையம் ஆகியவற்றுடன் இணைந்து ஐ.ஐ.டி. உருவாக்குகிறது.

சமூக விரோதச் சக்திகள் பயன்படுத்தும் வெடி குண்டுகளைக் கண்டுபிடிக்கும் வகையில், 'நானோ சென்சார்களுடன்' கூடிய இந்த உபகரணம் முக்கியமான இடங்களில் பொருத்தப்படும். வெடிகுண்டுகள் திட, திரவ, ஆவியாகும் வடிவம் என்று எப்படியிருந்தாலும் அவை வெடிக்கும் முன் இந்த உபகரணம் கண்டுபிடித்துவிடும்.

'பயிற்சியளிக்கப்பட்ட மோப்ப நாய் போல இந்த உபகரணத்தின் மின்னணு மூக்கு வெடிகுண்டுகளை மோப்பம் பிடித்துவிடும். முறையாகப் பயிற்சியளிக்கப்பட்ட மோப்ப நாய்களை எல்லா இடங்களிலும் வைத்திருப்பது இயலாத காரியம் என்பதால், இந்த 'மின்சார ரோபோ நாய் ஒரு நல்ல மாற்றாக இருக்கும்' என்று பேராசிரியர் ராம்கோபால் ராவ் கூறுகிறார்.

# விசமுள்ள டைனோசர்

பிரம்மாண்ட உயிரினமான டைனோசர்கள் அழிந்துவிட்டன. அவற்றைப் பற்றிய தகவல்கள் எப்போதுமே வியப்புக்குரியவை. உலகமெங்கும் கிடைக்கும் புதை படிவங்களின் அடிப்படையில் அவற்றின் பண்புகள், தன்மைகள் பற்றிய ஏராளமான விடயங்களை நாம் அறிந்து வருகிறோம்.

டைனோசர்களில் தாவரங்களை உண்ணும் சாதுவான டைனோசர்கள் இருந்தன. அதேபோல் மற்ற மிருகங்களை வேட்டையாடி உண்ணும் அசைவ டைனோசர்களும் இருந்திருக்கின்றன. பறவை போன்ற இறக்கை உள்ள டைனோசர்களும் அறியப்பட்டு உள்ளன.

இந்த வரிசையில் தற்போது, விசமுள்ள டைனோசர் இனமும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

டைனோசர்கள் பிரம்மாண்டமாக இருந்தாலும் வேட்டையாடித்தாக்கி உண்ணும் என்பதாகவே இதுவரை நம்பப்பட்டு வந்தது. ஆனால் சமீபத்தில் கிடைத்த ஆய்வு முடிவுப்படி விசத்தன்மை உடைய டைனோசர்களும் இருந்துள்ளன. அவை விசத்தை பயன்படுத்தி உணவு தேடிக் கொண்டுள்ளன என்பது தெளிவாகி இருக்கிறது.

துருக்கி அருகில் கிடைத்த ஒரு வகை டைனோசரின் படிமங்கள் இதை உறுதிப்படுத்துகிறது. இந்த டைனோசருக்கு இறக்கைகளும் வித்தியாசமான தாடைப் பகுதியும் உள்ளன். ஏற்கனவே அமெரிக்காவின் மெக்சிகோ மாகாணத்தில் 2000 ஆம் ஆண்டு வரிப்பள்ளங்களைக் கொண்ட டைனோசரின் பற்கள் கிடைத்தன. அப்போதே விசத்தன்மை உடைய டைனோசர்கள் இருக்கக்கூடும் என்று நம்பப்பட்டது.

தற்போது இதற்கான உறுதியான ஆதாரங்கள் கிடைத்து உள்ளன. இந்த புதிய டைனோசருக்கு சினார்னித்தோசரஸ் என்று பெயரிடப்பட்டு உள்ளது. இவற்றின் தாடைப் பகுதியில் வரிப்பள்ளங்களைக் கொண்ட பற்களும், விசம் சுரக்கும் சுரப்பிகள் இருந்ததற்கான தடயங்களும் இருக்கின்றன.

இவை பாம்புகள் போல பதுங்கி இருந்து பாய்ந்து விசத் தன்மையால் வேட்டையாடி உண்டு வந்துள்ளன. இந்த டைனோசரை அமெரிக்காவின் கான்சாஸ் பல்கலைக்கழக ஆய்வுக்குழு கண்டுபிடித்து உள்ளது.

இந்தவகை டைனோசர்களுக்கு இறக்கைகளும் இருப்பது பரிணாம உருமலர்ச்சிக் கொள்கைக்கான சிறந்த சான்றாக இருப்பதாக விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saturday மெயில் சிறுகதை

# மனைவியின் ஆசை...

பிரதீப்புக்கு அலுவலகத்தில் எந்த வேலையையும் ஒழுங்கா செய்ய முடியவில்லை. இரவு மனைவி துளசியுடன் ஏற்பட்ட சண்டையை நினைக்கும்போது அவனுக்குக் கவலையாக இருந்தபோதும் கோபமும் வந்தது. 'கல்யாணம் கட்டி 7 வருடங்களாகிவிட்டது. ஒரு தடவை கூட என்னோடு அவள் சண்டைப் போட்டது இல்லை. ஏன் நேற்று மட்டும் அவள் அப்படி நடந்து கொண்டாள்' என பிரதீப் கவலையடைந்தான்.

ஆனால், மறுபுறம் 'என்ன இருந்தாலும் அவள் என்னை அப்படிப் பேசியிருக்கக் கூடாது. அதுவும் பக்கத்து வீட்டு பரமசிவத்துடன் என்னை ஒப்பிட்டுப் பேசுகிறாள். அவர் மனைவி மீது அக்கறையுள்ளவராம். நான் வேலை வேலை என்று வேலையைக் கட்டிப்பிடித்துக் கொண்டு இருப்பதால் தன்னை தனது விருப்பு,வெறுப்புகளை நான் கண்டு கொள்வதில்லையாம். எப்படி துளசியால் இப்படிப்பேச முடிந்தது' என்று கோபமும் பிரதீப்புக்கு வந்தது.

பிரதீப்பின் மனச்சாட்சி வேறு அவனைக் குற்றஞ்சாட்டியது. துளசி சொல்வது சரிதானே. நீ வேலை வேலை என இருந்துவிட்டு வீட்டுக்குப் போகிறாய்.போனவுடன் சாப்பிட்டுவிட்டு அசதியில் வேளைக்கே தூங்கி விடுகிறாய். பின்னர் காலையில் எழும்பி மீண்டும் வேலை. அவள் உன்னிடம் என்னத்தைப் பெரிதாகக் கேட்டு விட்டாள். ஊர் உலகத்தில் இல்லாததையா கேட்டாள்

அவளுக்கும் ஒரு மனசு இருப்பது உனக்குத் தெரியாதா? குடும்பத்தை நிர்வகிப்பது என்பது உனது வேலையை விடக் கடினமானது. அதில் உனக்கு அவள் எப்பவாவது தொந்தரவு கொடுத்துள்ளாளா? அல்லது உனது பிள்ளை தொடர்பிலாவது நீ ஏதாவது செய்திருக்கிறாயா? அவளும் ஒரு மனிசிதானே. அவளுக்கென்று சில ஆசைகள் இருப்பது தவறா? பணம் பணம் என உழைத்தும் மனதில்,குடும்பத்தில் நிம்மதியில்லாவிட்டால் அந்தப் பணத்தில் உனக்கு என்ன பலன் ஏற்பட்டு விடப்போகிறது என மனச்சாட்சி பிரதீப்பைக் குடைந்து கொண்டிருந்தது.




இதனை இப்படியே விடக்கூடாது. இதற்கு ஒரு முடிவு கட்டியாக வேணும். பக்கத்து வீட்டு பரமசிவத்துடன் வேறு என்னை ஒப்பிட்டுப் பேசிவிட்டாள். இதற்குப் பிறகும் நான் சும்மா இருந்தால் நான் மனிசனே இல்லை. இன்று இதற்கு முடிவு கட்டாது விட்டால் இப்பிரச்சினை ஒவ்வொரு நாளும் தொடரும். இதனால் வீட்டில் நிம்மதி இல்லாமல் போய்விடும். பக்கத்து வீடுகளுக்குப் பிரச்சினை தெரிந்தா என்னால வெளிய தலை காட்ட முடியாமப் போய்விடும் என்று பலவாறு பிரதீப் சிந்தித்தான்.

ஓ.கே. இந்தப் பிரச்சினையைத் தீர்க்க துளசி கேட்ட தொலைக்காட்சிப் பெட்டியை வேண்டிக் கொடுப்பதுதான் ஒரே வழியென்ற முடிவுக்கு வந்த பிரதீப் அலுவலகத்தில் அரை நாள் விடுப்புப்பெற்று துளசிக்கு தொலைக்காட்சிப்பெட்டி வாங்க சந்தோஷமாகப் புறப்பட்டான்.

**பழவத்தை தீபன்**

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
'Saturday மெயில் சிறுகதை'
இல. 336, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பார்க்க எமது வாழ்நாளில் 10 வருடங்களை செலவிடுகிறோம்

உலகை ஆட்டிப்படைக்கும் இன்றைய கணினி யுகத்தில் ஈ.மெயில் (மின்னஞ்சல்) இல்லாதவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். வயது வேறுபாடின்றி பலரையும் ஆட்கொண்டிருக்கும் இந்த ஈ.மெயில் கலாசாரம் ஒரு போதைப் பழக்கத்துக்கு ஒப்பானதாகவே கூறப்படுகின்றது. எந்தவொரு செயலுக்கும் இரு பக்கம் இருப்பது போல் இதற்கும் நன்மை ஒருபுற மிருந்தாலும் தீமை மறுபுறம் உள்ளது.

சகல அரச தனியார் அலுவலகங்களும் தற்போது கணினி மயப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவற்றின் சகல தொடர்பாடல்களும் ஈ.மெயில் மூலமாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு தகவலை அனுப்புவதற்கு சாதாரண சேவை மூலம் சில, பல நாட்கள் எடுக்கும் நிலையில் ஈ.மெயில் மூலம் அந்தத் தகவலை அடுத்த நொடியே சம்பந்தப்பட்டவருக்கு அனுப்பி வைக்க முடியும்.



அது மட்டுமன்றி ஈ.மெயில்களில் 'சாட்' பண்ணக்கூடிய வசதிகள் வீடியோ மூலமான உரையாடல்கள் போன்றவற்றைச் செய்யக் கூடியதாகவிருப்பதால் ஒவ்வொரு அலுவலகங்களிலும் ஏன் பல வீடுகளிலும் கூட இன்று ஈ.மெயில் இன்றியமையாத விடயமாகிவிட்டது. ஈ.மெயில் இன்றி ஓர் அணுவும் அசையாது என்ற நிலைமை ஏற்பட்டுவிட்டது.

அலுவலகங்களில் கணினிப் பாவனைகள் அதிகரித்துள்ள நிலையில் அங்கு பணிபுரிவோர் தமது தனிப்பட்ட வரையிலான ஈ.மெயில்களைப் பார்ப்பதிலும் பதில்கள் அனுப்புவதிலும் ஆர்வம் காட்டுவதால் வேலை நேரங்கள் வீணடிக்கப்படுவதுடன் வேலையை குறிப்பிட்ட நேரங்களுக்குள் முடிக்க முடியாத நிலை ஏற்படுவதாக அலுவலகப் பொறுப்பதிகாரிகள் கூறுகின்றனர்.

அரச அலுவலகங்களை விடவும் தனியார் நிறுவனங்களிலேயே ஈ.மெயில் பாவனைகள் அதிகளவில் இடம் பெறுவதுடன் வேலை நேரங்களும் வீணடிக்கப்படுவதாக ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. பெருமளவிலானோர் வேலை நேரங்களில் திருட்டுத்தனமாக ஈ.மெயில்களைப் பார்ப்பதாகவும் அதற்கு பதில் அனுப்புவதாகவும் அந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஈ.மெயில் பார்க்கவும் அதற்கு பதில் அனுப்பவும் தங்களின் வாழ்நாளில் 10 ஆண்டுகள் வரை செலவிடுவதாக இன்னொரு ஆய்வு தெரிவிக்கின்றது. இதைத் தவிர்ப்பது அவசியம் எனவும் இல்லாவிடின் காலப் போக்கில் இது ஒரு மனவியாதியாக அல்லது ஒரு போதைப் பழக்கம் போல் மாறிவிடுமெனவும் அந்த ஆய்வு எச்சரிக்கின்றது.

இன்றைய அவசர தேவைக்கு ஏற்ப கடிதப் போக்குவரத்து முறையும் இலத்திரனியல் மயமாகியுள்ளது. அது தான் ஈ.மெயில். ஆனால் சிலர் இதற்கு அடிமையாகவே மாறியுள்ளனர். கடும் வேலை, நெருக்கடிக்கு மத்தியிலும் அலுவலக ஊழியர்கள் 5 நிமிடத்துக்கு ஒரு தடவை ஈ.மெயிலில் ஏதேனும் வந்துள்ளதா எனப் பார்ப்பதாக ஸ்கொட்லாந்தின் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமான 'இன்டியியா பயிற்சி அமைப்பு' நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ.மெயில் பார்ப்பதுடன் அதற்கு உடனடியாகவே பதிலும் அனுப்புகின்றனர். இதனால் செய்யும் வேலை பறிக்கப்படுகின்றது. ஈ.மெயிலுக்காக ஒருவாரத்தில் ஒரு ஊழியர் 8.5 மணி நேரத்தைச் செலவிடுகின்றார். இதன்படி பார்த்தால் வாழ்நாளில் 9.7 ஆண்டுகளை அவர் ஈ.மெயில் பார்ப்பதற்காகவும் பதில் அனுப்புவதற்காகவும் செலவிடுகின்றார்.

சிலர் நள்ளிரவில் சிறுநீர் கழிக்க எழுந்து செல்லும் போது கூட அந்த நேரத்தில் ஈ.மெயில் ஏதாவது வந்துள்ளதா எனப் பார்க்கிறார்கள். பொதுவாக எதையோ எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் இது போல்தான் செய்வார்கள். புகைத்தல், மது, சூதாட்டம் போன்றது தான் இந்தப் பழக்கமும். இதை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும் என்கிறார் இந்திய உளவியல் நிபுணரான மைக்கல் ரெட்டி.


ஈ.மெயில் எமது வேலைகளை சுலபமாக்கியது போல் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோரின் செயற்பாடுகளையும் மிக இலகுவாக்கியுள்ளது. அவர்களின் தொடர்பாடல்கள் முழுவதும் ஈ.மெயில்கள் மூலம் இடம்பெறுவதாலேயே பல நாடுகளில் தீவிரவாதிகளின் செயற்பாடுகளையும் சட்டவிரோத செயற்பாடுகளையும் தடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.


அது மட்டுமன்றி ஈ.மெயில் மூலமான பணமோசடிகள் ஏராளமாக இடம்பெற்று வருகின்றன. ஈ.மெயில் மூலம் வரும் தகவல்கள் மூலம் பல்வேறு வங்கிகளிலும் மோசடிகள் இடம்பெறுகின்றன. இச் செயல்களில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிப்பது என்பது குதிரைக் கொம்பாக இருப்பதால் இம் மோசடிகளைக் கட்டுப்படுத்த முடியாமலுள்ளது.

எனவே ஈ.மெயில்கள் மூலம் நாம் அதிக நன்மைகளைப் பெற்றாலும் அதனால் பல தீமைகளும் ஏற்படுவதால் நாம் ஈ.மெயில் பாவனையை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதே எமக்கு சிறந்ததாகவிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அறுந்து போன உறவு

இந்திய டெனிஸ் நட்சத்திரம் சானியா மிர்சா (23 வயது) தனது திருமண நிச்சயதார்த்தத்தை திடீரென இரத்துச் செய்துள்ளார். முகமது சோஹ்ராப் மிர்சாவுடன் (24 வயது) இணக்கமாக வாழ முடியாதெனக் கருதியதால் இம்முடிவை மேற்கொண்டுள்ளார்.

சர்வதேச டெனிஸ் அரங்கில் இந்தியாவுக்குப் பெருமை சேர்த்து வருகிறார் சானியா மிர்சா. 2009 ஜூலை 10 ஆம் திகதி சானியா மற்றும் அவரது குழந்தைப் பருவ நண்பரான முகமது சோஹ்ராப் மிர்சா இடையே திருமண நிச்சயதார்த்தம் ஹைதராபாத்தில் நடந்தது. அப்போது சோஹ்ராப் பரிசாக அளித்த தங்கம், வைரங்கள் பதிக்கப்பட்ட 20 இலட்சம் ரூபா மதிப்பிலான பாரம்பரிய உடைய சானியா அணிந்திருந்தார்.

இவர்களது திருமணம் இன்னும் 2 ஆண்டுகளில் நடக்கும் என அறிவிக்கப்பட்டது. அதுவரை டெனிஸ் போட்டிகளில் சானியா பங்கேற்பார். லண்டனில் தனது எம்.பி.ஏ. படிப்பை சோஹ்ராப் தொடர்வார் எனக் கூறப்பட்டது.

**கருத்து வேறுபாடு:**

இதற்குப் பின் சானியா பங்கேற்கும் போட்டிகளில் சோஹ்ராப்பைக் காண முடிந்தது. இருவரும் ஒன்றாகப் பல்வேறு இடங்களுக்குப் பயணம் மேற்கொண்டனர். இவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாகத்தான் திருமணத்திற்குப் பின் டெனிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வுபெறப் போவதாக சானியா கூறியுள்ளார்.

'ஒரு ஆண்டில் 35 வாரங்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெனிஸ் விளையாடுவது என்றால் எதற்காகத் திருமணம் முடிக்க வேண்டும். எனவே, ஓய்வுபெறுவதுதான் சிறந்தது. எனது கணவருடன் சேர்ந்து வாழ விரும்புகிறேன். இது எனது தனிப்பட்ட முடிவு' என்றார்.

**இணக்கமில்லை:**

இந்தப் போட்டி இருவருக்குமிடையே நல்லுறவு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டியது. டெனிஸ் போட்டிகளுக்காகப் பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் சானியாவுடன், சோஹ்ராப் இணைந்து வாழ்வது கடினம் எனக் கூறப்பட்டது. இது தொடர்பாக மனக்குழப்பத்தில் இருந்த சானியா சமீபத்தில் அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் சொதப்பினார். நேற்று முன்தினம் திடீரெனத் தனது நிச்சயதார்த்தம் இரத்துச் செய்யப்படுவதாக அறிவித்தார். திருமண நிச்சயதார்த்தம் முடிந்த ஆறு மாதத்திற்குப் பின் இம் முடிவை எடுத்ததற்கான காரணத்தை தெளிவாகக் குறிப்பிடவில்லை.

இது குறித்து சானியா வெளியிட்டுள்ள அறிக்கையில்;

'கடந்த 5 ஆண்டுகளாக நாங்கள் நண்பர்களாக இருந்தோம். திருமண நிச்சயதார்த்தம் செய்தவர்கள் என்ற அடிப்படையில் இணக்கமாக வாழ முடியாது என்பதை உணர்ந்தோம். இனி சோஹ்ராப் வாழ்க்கை சிறப்பாக அமைய எனது வாழ்த்துகள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

**நட்பு பாதிக்காது:**

சானியாவின் தந்தை இம்ரான் மிர்சா கூறுகையில்;

'இரு குடும்பங்களும் 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பழகி வருகிறோம். நிச்சயதார்த்தம் இரத்துச் செய்யப்பட்டாலும் எங்களது நட்புத் தொடரும்' என்றார்.

சோஹ்ராப் குடும்பம் ஈரானில் இருந்து குடிபெயர்ந்து பல ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் 'செட்டில்' ஆனது. இங்கு பேக்கரித் தொழில் நடத்தி வருகின்றனர். தற்போதைய சூழ்நிலை குறித்து சோஹ்ராப் தந்தை, அடில் மிர்சா கூறுகையில்;

'டெனிஸ் போட்டிகளில் சானியா பங்கேற்பது பிரச்சினைக்குக் காரணமல்ல. இருவரின் மகிழ்ச்சியைக் கருத்தில் கொண்டு நிச்சயதார்த்தத்தை இரத்துச் செய்ய ஒருமனதாக ஒப்புக்கொண்டோம். இரு குடும்பங்களின் நல்லுறவு தொடரும்' என்றார்.

நிச்சயதார்த்தம் இரத்தான நிலையில், டெனிஸ் போட்டிகளில் மட்டும் கவனம் செலுத்த சானியா முடிவு செய்துள்ளார். பெடரேஷன் கிண்ணத்துக்காக ஆசிய ஓசியானியாப் பிரிவு 2 தொடரில் பங்கேற்க நேற்று கோலாலம்பூர் புறப்பட்டார்.

**போராட வேண்டும்:**

நிச்சயதார்த்தம் இரத்தானது சானியாவின் தனிப்பட்ட வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இது குறித்து அவரது தந்தை இம்ரான் மிர்சா கூறுகையில்;

'இருவரும் ஒத்துப் போகவில்லை என்பதை அறிவேன். அது தொடர்பான விபரங்கள் எனக்குத் தெரியாது. இரு குடும்பங்களுக்குமிடையே நெருக்கம் அதிகம் என்பதால் எல்லாம் சுமுகமாக முடிந்தது. உணர்ச்சிபூர்வமான விடயம் என்பதால் சானியாவின் வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இதிலிருந்து மீளக் கடுமையாகப் போராட வேண்டும். ஆனாலும் டெனிஸ் வாழ்க்கையில் எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாது. தொடர்ந்து விளையாடுவார்' என்றார்.

## ஆடத் துடிக்கும் மனது



## கனவு நிறைவேறியது

தனது பிறந்த நாளில் அவுஸ்திரேலிய ஓப்பனில் விளையாடிய மகிழ்ச்சியிலிருக்கிறார் ரஷ்ய டெனிஸ் புயல் மரியா கிரிலென்கோ. இம்முறை ஷரபோவாவை வீழ்த்தி அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்திய இவா, டெனிஸ் அரங்கில் மிக விரைவில் ஆதிக்கம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



மரியா கிரிலென்கோ 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் பிறந்தார். இவர் 2002 ஆம் ஆண்டு முதன் முதலில் டெனிஸ் அரங்கில் காலடி வைத்தார். இதுவரை இவர் சர்வதேச அளவில் பெரிதாக சாதிக்காவிட்டாலும் தற்போது நடந்து வரும் அவுஸ்திரேலியன் ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் தொடர் மூலம் தனது குழந்தைப் பருவ கனவு ஒன்றை நனவாக்கியுள்ளார்.

அதாவது இவாது பிறந்தநாளில் அவுஸ்திரேலிய ஓப்பன் டெனிஸ் தொடரின் ஒற்றையர் பிரிவுப் போட்டியில் விளையாட வேண்டும் என்பது தான் அந்தக் கனவு.

இத் தொடரில் இவர் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, தினாரா சபினா உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்களை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார். காலிறுதிப் போட்டி 26 ஆம் திகதி நடந்தது. இதில் அவர் சீனாவின் ஜி ஜெங்கிடம் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார். தோல்வியடைந்தது ஏமாற்றமாக இருந்தாலும் தனது குழந்தைப் பருவக் கனவு நிறைவேறியது மகிழ்ச்சியளித்துள்ளதாகக் கூறினார்.

இது குறித்து கிரிலென்கோ கூறுகையில்;

அவுஸ்திரேலிய ஓப்பன் காலிறுதியில் தோல்வியடைந்த போதிலும் எனது குழந்தைப் பருவக் கனவு நிறைவேறியது பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. இப்போட்டியில் பங்கேற்பதற்காக பிறந்த நாள் 'பார்ட்டியை' ஒத்தி வைத்தேன். அடுத்து வரும் தொடர்களில் [illegible] வெளிப்படுத்துவேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ச்சிப் பாதையில் பாகிஸ்தான் கிரிக்கெட்



உலகின் முன்னணி கிரிக்கெட் அணிகளுள் பாகிஸ்தானும் ஒன்று. ஆனால் இன்று அந்த அணி, வீழ்ச்சிப்பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது. இதற்குப் பாகிஸ்தானில் நடக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல்தான் முக்கிய காரணம்.

கடந்த ஆண்டு பாகிஸ்தானுக்கெதிராக டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கச் சென்ற இலங்கை அணி வீரர்கள் லாகூரில் பயங்கரவாதத் தாக்குதலுக்குள்ளாகினர். அதற்குப் பின் ஆரம்பமானது பாகிஸ்தான் கிரிக்கெட்டின் வீழ்ச்சி.

பாகிஸ்தான் மண்ணில் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க எந்தவொரு சர்வதேச அணியும் முன்வரவில்லை. இதனால், தங்கள் நாட்டில் நடத்த வேண்டிய கிரிக்கெட் போட்டிகளை டுபாயில் நடத்தி வருகிறது பாகிஸ்தான். இதன் விளைவாக அந்நாட்டுக் கிரிக்கெட் சபை பெரிதும் வறுமையில் வாடி வருகிறது.

எல்லாவற்றுக்கும் மேலாக 2010 இல் உலகக் கிண்ணத்தை நடத்தவுள்ள நாடுகளின் பட்டியலிலிருந்து பாகிஸ்தானை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) நீக்கிவிட்டது. இதற்கான இழப்பீட்டுத் தொகையை ஐ.சி.சி. வழங்கினாலும் கிரிக்கெட் அரங்கில் பாகிஸ்தானின் பெருமை குலைந்துவிட்டது.

**புறக்கணிப்பு:**

2008 ஆம் ஆண்டு மும்பையில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஏராளமானோர் பலியாயினர். அதற்குப் பின் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் சுமுக உறவு இதுவரை ஏற்படவில்லை. இதனால், இரு நாட்டுக் கிரிக்கெட் அணிகளுக்குமிடையிலான போட்டிகளும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன. தவிர, இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.) தொடரில் கூடப் பாகிஸ்தான் வீரர்கள் இடம்பெற முடியவில்லை.

பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு ஐ.பி.எல். அணியின் உரிமையாளர்கள் பாகிஸ்தான் வீரர்கள் எவரையும் ஏலத்தில் எடுக்கவில்லை. ஏற்கனவே, போதிய வருமானமின்றித் தவித்து வரும் பாகிஸ்தான் வீரர்களுக்கு ஐ.பி.எல். மூலம் வரவிருந்த வருவாயும் தற்போது தடைப்பட்டுவிட்டது. இதனால் கடும் சோகத்தில் ஆழ்ந்துள்ளனர் பாகிஸ்தான் வீரர்கள்.

**ஒற்றுமை இல்லை:**

பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வரும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வீரர்களின் நலனில் அக்கறை செலுத்தத் தவறி வருகிறது. இதனால் அணியில் அடிக்கடி பிளவேற்பட்டு வருகிறது.

யூனிஸ்கான் தலைமையில் சிறப்பாகச் செயற்பட்டு வந்த பாகிஸ்தான் அணி கடந்த ஆண்டு 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத்தை தன்வசப்படுத்தியது. அதற்குப் பின் சூதாட்டப் புகாரில் சிக்கிய யூனிஸ்கான் கப்டன் பொறுப்பிலிருந்து விலகினார்.

தற்போது முகமது யூசுப் கப்டனாகவுள்ளார். இவர் பொறுப்பேற்றவுடன் அணியின் செயற்பாடு படுமந்தமாகிவிட்டது. அவுஸ்திரேலியா சென்றுள்ள பாகிஸ்தான் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களை மோசமாக இழந்துள்ளது. வீரர்களுக்குள் ஒற்றுமையில்லை என ஒருவருக்கொருவர் மாறிமாறி குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

ஒருபுறம் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் கப்டனை மாற்றவேண்டும். கிரிக்கெட் சபையை மாற்ற வேண்டுமெனக் குரல் கொடுத்து வருகின்றனர். ஒட்டுமொத்தமாகப் பாகிஸ்தான் கிரிக்கெட் பாரம்பரியமிக்க புகழை இழந்து வருகிறது. சரிவிலிருந்து மீள வேண்டுமானால், பாகிஸ்தான் அணி சர்வதேசக் கிரிக்கெட் அரங்கில் வெற்றிகளைக் குவிக்க வேண்டியது அவசியம்.




# முரட்டாட்டம்

## கிறிஸ்ரியானோ றொனால்டோ மீது புதிய குற்றச்சாட்டு




கால்ப்பந்து அரங்கின் நட்சத்திர வீரரான கிறிஸ்ரியானோ றொனால்டோ சமீப காலமாக முரட்டு ஆட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். எதிரணி வீரரின் மூக்குடைத்த இவர் தற்போது இரண்டு போட்டிகளில் பங்கேற்க தடையைச் சந்தித்துள்ளார்.

போர்த்துக்கல் அணியின் கப்டனாக இருக்கிறார் கிறிஸ்ரியானோ றொனால்டோ (25 வயது). 2008 இல் சிறந்த கால்ப்பந்து வீரருக்கான சர்வதேச உதைபந்தாட்ட சபையின் (பிபா) விருது பெற்றார். சமீபத்தில் ரியல் மாட்ரிட் கிளப் அணி இதுவரை 6 ஆண்டுகளுக்கு 1833 கோடி ரூபாவுக்கு ஒப்பந்தம் செய்தது. இந்த அணிக்காக இதுவரை 12 போட்டிகளில் பங்கேற்று 9 கோல்கள் அடித்துள்ளார். ஆனால் இந்த 'ஹீரோ' களத்தில் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதற்காக இரண்டாவது முறையாக சிவப்பு அட்டை காட்டப்பட்டு எல்லோருக்கும் வில்லனாக மாறியிருக்கிறார்.

கடந்த 25 ஆம் திகதி நடந்த மலாகா அணிக்கெதிரான போட்டியில் றொனால்டோ தனது ரியல் மாட்ரிட் அணிக்காக இரண்டு கோல் அடித்து வெற்றி பெற உதவினார். போட்டியின் 70 ஆவது நிமிடத்தில் எதிரணி வீரர் மூக்கை தனது கையால் உடைத்தார். இதனால் சிவப்பு அட்டை காட்டப்பட்டு உடனடியாக களத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்.

2009 டிசம்பரில் அல்மெரியா அணி வீரர் மூக்கை உடைத்ததற்காக சிவப்பு அட்டை காட்டப்பட்ட இவர் இரண்டாவது முறையாக இப் பிரச்சினையில் சிக்கினார். இது குறித்து றொனால்டோ கூறுகையில்;

எதிரணியினரை காயப்படுத்தும் நோக்கத்துடன் விளையாடுபவன் நான் அல்ல. பாட்ரிக் மிட்லிகாவின் மூக்கு உடைந்து இரத்தம் வந்ததனை 'ரி.வி.'யில் பார்த்துத் தெரிந்து கொண்டேன். மலாகா அணியினரின் ஓய்வறைக்குச் சென்று அவரிடம் மன்னிப்பும் கேட்டேன். ஆனால் எனக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டதை மிகவும் அவமானமாக உணர்கிறேன் என்றார்.

**மிருகத்தனமான செயல்;**

சம்பவம் குறித்து மலாகா அணியின் பயிற்சியாளர் ஜுவான் ரமோன் கூறுகையில்;

இந்த விடயத்தில் றொனால்டோ சொல்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் பாட்ரிக்கின் மூக்கை நோக்கி முதலில் ஒருமுறை கையை வீசினார். அப்போது தப்பித்த பாட்ரிக் இரண்டாவது முறை காயமடைந்தார். இது மிருகத்தனமான செயல் என்றார்.

**நிர்வாகி ஆதரவு;**

ரியல் மாட்ரிட் அணியின் நிர்வாகி ஜோர்ஜ் இது பற்றிக் கூறுகையில்;

எந்த வீரர் தவறு செய்கிறார். யார் முரட்டுத்தனமாக விளையாடுகிறார்கள் என நடுவர்களுக்குத் தெரியும். றொனால்டோ யதார்த்தமாக நடந்து கொண்டார். இதற்காக நடுவரின் முடிவை நான் குறை சொல்லவில்லை. றொனால்டோ எப்போதும் உயர்ந்த நோக்கத்துடன் விளையாடுவார் என்றார்.

இதுவரை இரண்டு வீரர்கள் மூக்கை உடைத்து சர்ச்சையில் சிக்கியுள்ள இவர் இனிமேலாவது ஒழுக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களுடன் கைகுலுக்க தயாராகும் மேற்குலகம்
# வல்லாதிக்கத்தின் பலவீனமா? தலிபான்களின் பலமா?

மானுட நேயமற்ற, கொஞ்சமேனும் கருணையற்ற பயங்கரவாதிகளாகவும் தீவிரவாதிகளாகவும் சித்தரித்து வந்த தலிபான்களுடன் கைகுலுக்க மேற்குலகம் ஆயத்தமாகி வருகிறது.

'நல்லிணக்கம்' 'புனர்வாழ்வு' என்ற பதங்களின் அடிப்படையில் தலிபான்களுடன் பேச்சுகளை நடத்துவதற்கான முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன.

தீவிரவாதத்தை கைவிடத் தயாராகும் தலிபான் உறுப்பினர்களை மீள சமூகத்தில் இணைக்கும் முயற்சிக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகையைக் கொண்ட நிதியமொன்றை உருவாக்க ஒபாமா நிர்வாகமும் அதன் முக்கிய சகாக்களான ஜப்பான், ஜேர்மனி மற்றும் பிரிட்டன் என்பன திட்டமிட்டுள்ளன.

இந்நாடுகளின் திட்டத்திற்கு உறுதுணையாக தடைவிதிக்கப்பட்ட பட்டியலிலிருந்து முன்னாள் வெளியுறவு அமைச்சர் வாகில் அஹ்மட் முத்தாவாகில் உள்ளிட்ட தலிபான்களின் சிரேஷ்ட தலைவர்கள் ஐந்து பேரினதும் பெயர்களை ஐ.நா.நீக்கியுள்ளது.

போக்குவரத்துத் தடை மற்றும் சொத்துமுடக்கம் போன்றவற்றை உள்ளடக்கிய ஐ.நா.வின் தடைப் பட்டியலிலிருந்து இவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். ஆப்கானில் தலிபான்களுக்கெதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டுப் படைகள் அங்கு தலிபான்களுக்கெதிரான படை நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதுதவிர, இலட்சக்கணக்கான படையினரை அங்கு நடவடிக்கையில் ஈடுபடுத்தியிருக்கும் அமெரிக்கா இவ்வருடம் மேலதிகமாக 30 ஆயிரம் படையினரை அங்கு அனுப்பவுள்ளது.

தலிபான்களுக்கெதிராகக் கடுமையான நடவடிக்கையை முன்னெடுத்து வருவதாக வெளிநாட்டுப் படைகள் தெரிவிக்கின்ற போதிலும் வெளிநாட்டுப் படைகள் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கும் தலைநகர் காபூலின் இருதயப் பகுதிகளில் தலிபான்கள் அடிக்கடி கடும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த வருடம் பிற்பகுதியில் காபூலிலுள்ள ஐ.நா. தலைமையகத்தை முற்றுகையிட்டு தலிபான்கள் நடத்திய தாக்குதலில் ஐ.நா.வின் 5 உயரதிகாரிகள் கொல்லப்பட்டிருந்தனர்.

தலிபான்களை பூண்டோடு அழிப்பதென்ற சபதத்துடன் ஆப்கானை ஆக்கிரமித்த அமெரிக்காவும் அதற்கு துணை நின்ற ஐ.நா. மற்றும் நேட்டோ போன்ற அமைப்புகளும் இன்று சமரசத்திற்குத் தயாராகி வருகின்றன.

அமெரிக்காவை உலுக்கிய செப்டெம்பர் 11 தாக்குதலுக்குப் பின்னர் பின்லேடனை உயிருடன் பிடிப்பது அல்லது சடலமாக மீட்பது என்பவற்றின் மூலம் அல்-ஹைடா மற்றும் தலிபான் அமைப்பை பூண்டோடு அழிப்பதென்ற சபதத்துடன் முழு ஆற்றலையும் பயன்படுத்தி களமிறங்கிய அமெரிக்கா இன்று மென்போக்கை கடைப்பிடிப்பதன் மர்மம் என்ன?

தலிபான்களின் பலமா? அல்லது முழு ஆற்றலுடன் களமிறங்கிய வெளிநாட்டுப் படைகளின் பலவீனமா?

கடந்த வாரம் செய்திச் சேவையொன்றுக்குப் பேட்டியொன்றை வழங்கியிருந்த ஆப்கானிலுள்ள அமெரிக்க இராணுவத் தளபதி இதுவரை நடைபெற்ற போர் போதுமெனவும் அமைதி நடவடிக்கைகளை தான் விரும்புவதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையிலேயே தீவிரவாதத்தை கைவிட விரும்பும் போராளிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதன் மூலம் அவர்களை சமூகத்திற்குள் உள்வாங்கும் திட்டத்தை கர்சாய் வெளியிட்டுள்ளார்.

தலிபான்களுக்குப் புனர்வாழ்வு என்ற விவகாரம் தலிபான்களை நல்லவர்கள், கெட்டவர்கள் எனப் பிரித்துப் பார்க்க விரும்பாத இந்தியாவுக்குப் புதிய தலைவலியை உருவாக்கியுள்ளது.

தலிபான்களின் ஆட்சிக் காலத்தில் வெளியுறவு அமைச்சராக இருந்த முத்தாவாகில் அப்போது இந்தியாவுக்கெதிரான நடவடிக்கைகளுக்குப் பாகிஸ்தானுக்கு உதவியமை இந்தியாவுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஆப்கானின் எதிர்காலம் குறித்து லண்டனில் நடைபெற்ற முக்கிய மாநாடொன்றில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா உள்ளிட்ட 70 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இம் மாநாட்டில் கர்சாய் , தலிபான் உறுப்பினர்களை தமது பக்கம் இழுக்கும் திட்டம் வெற்றியளிக்குமென உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தலிபான்களின் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு நிதியுதவி மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்குவதனூடாக அவர்களை அவ் அமைப்பிலிருந்து பிரிக்கும் திட்டத்திற்கு ஆரம்ப கட்டமாக 140 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்க உலக நாடுகளின் தலைவர்கள் உறுதியளித்துள்ளனர்.

இதற்கிடையில் இம்மாத முற்பகுதியில் காபூலிலுள்ள ஐ.நா.வின் விசேட தூதுவர் தலிபான்களுடன் இரகசிய பேச்சுகளை நடத்தியிருந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறாகத் தலிபான்களுடன் சமாதான முயற்சிகளை தொடர்வதற்கான அடித்தளங்கள் பல தரப்பினராலும் பலமாகப் போடப்பட்டு வருகின்றது.

உலகிலேயே படுபாதகச் செயல்களை மேற்கொள்ளும் பயங்கரவாதிகளாகச் சித்திரிக்கப்பட்ட தலிபான்களுடனான மேற்குலகின் சமாதான முயற்சிகளின் பின்னணியில் தலிபான்களின் பலமா? வல்லாதிக்க அரசுகளின் பலவீனமா? இருக்கிறது என்ற சந்தேகம் இச்சந்தர்ப்பத்தில் எழுவது தவிர்க்க முடியாததே.

# ஹெய்டிக்கு நிவாரண நிதி சேகரிக்கும் பிரிட்டனின் 7 வயதுச் சிறுவன்

## சர்வதேச வலம்

ச.துஷ்யந்தினி



பிறருக்கு உதவுவதற்கு எவ்வாறானதொரு தாராள மனம் வேண்டுமென்பதை ஹெய்டி பூகம்பத்தின் காரணமாக 7 வயது சிறுவனொருவன் நிரூபித்துள்ளான்.

ஒரு நிகழ்வுக்குரிய நன்கொடையை வழங்குமாறு கோரியோ அல்லது ஆதரவற்றவர்களுக்கு அனுசரணை வழங்குமாறு கோரியோ நம்மை அணுகுபவர்களுக்கு நம்முள் எத்தனை பேர் முகங்கோணாமல் உதவி செய்கின்றோம்.

இந்நிலையில், பிரிட்டனின் தலைநகர் லண்டனைச் சேர்ந்த 7 வயதுச் சிறுவனான சார்ளி சிம்ஸன் 500 ஸ்ரேலிங் பவுணை ஹெய்டி நிவாரண நிதியாகச் சேர்க்கத் திட்டமிட்டு அனுசரணையாளர் ஒருவர் மூலம் சைக்கிள் ஒன்றைப் பெற்று அதனைச் செலுத்தி லண்டனின் பல பகுதியெங்கும் சென்று நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தான்.

500 ஸ்ரேலிங் பவுணை இலக்காகக் கொண்டு தனது நிதிச் சேகரிப்பை ஆரம்பித்த இச்சிறுவன் தற்பொழுது 72 ஆயிரம் ஸ்ரேலிங் பவுணுக்கும் அதிகமான நிதியைச் சேகரித்துள்ளான்.

தனது நிதிச்சேகரிப்புக் குறித்த நடவடிக்கையை யஸ்ற் கிவிங் என்ற இணையத்தளத்தில் பிரசாரப்படுத்தியிருப்பதால் இச்சிறுவன் உலக மக்களின் மனங்களில் இடம்பிடித்துள்ளான்.

அதேவேளை, இச்சிறுவனின் நடவடிக்கைக்கு ஹெய்டி சிறுவர்கள் சார்பாக யுனிசெப் அமைப்பும் சிறுவனுக்கு பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துள்ளது.

தனது நிவாரண நிதி சேகரிப்பு நடவடிக்கை குறித்து சிறுவன் சார்ளி சிம்ஸன் தெரிவிக்கையில்;

ஹெய்டியில் ஏற்பட்ட பூகம்பத்தில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டும் வாழ்வை இழந்தும் தவிக்கும் நிலையில் அம்மக்களுக்கு என்னாலான உதவியை செய்யும் நோக்கில் அனுசரணை ஊடான சைக்கிள் ஓட்டம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டேன்.

ஹெய்டியிலுள்ள ஒவ்வொரு பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உணவு, நீர் மற்றும் கூடாரங்களை வாங்க எனக்கு ஒருதொகைப் பணம் தேவைப்பட்டதெனத் தெரிவித்தார்.

## வாடிக்கையாளர்களின் உடைகளுக்கு பிரிட்டன் 'சுப்பர் மார்கெட்' கட்டுப்பாடு

பிரிட்டனிலுள்ள சுப்பர் மார்கெட் ஒன்று தனது வாடிக்கையாளர்கள் எத்தகைய உடைகளை அணிந்து வரலாம் என்பது குறித்து கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.

வேல்சின் கார்டில் உள்ள டெஸ்கோ நிறுவனத்தின் அங்காடி ஒன்றின் நிர்வாகமே இக்கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளது.

அதாவது, தனது வாடிக்கையாளர்கள் கட்டாயம் சப்பாத்துகளை அணிந்துவரவேண்டுமெனக் கூறியிருக்கும் இந்த அங்காடி வாடிக்கையாளர்கள் சாரம் அணிந்து வரக்கூடாதெனவும் உத்தரவிட்டுள்ளது.

ஆனால்,இவை தவிர்ந்த ஆடை அணிவது குறித்த உறுதியான விதிமுறை எதனையும் அந்நிர்வாகம் விதிக்கவில்லை என்றும் ஆனால்,இரவு நேரங்களில் அணியும் உடைகளில் வாடிக்கையாளர்கள் வரும்போது ஏனைய வாடிக்கையாளர்கள ஆத்திரமடையக்கூடும் என்பதால் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென டெஸ்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.



# புகைபிடிக்கும் பழக்கத்தை கைவிட விரும்புவோரின் கவனத்துக்கு...




புகைபிடிக்கும் பழக்கத்தைக் கைவிட முயற்சிப்பவர்கள் தங்களது நோக்கத்தை முதலில் குடும்பத்தவர்களுக்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தெரியப்படுத்துவதன் மூலமாக தங்கள் முயற்சியில் வெற்றியடையக் கூடியதாக இருக்கும் என்று அவுஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டிருக்கிறது.

கடுமையாகப் புகைபிடிக்கும் 1424 பேரைப் பயன்படுத்தியே இந்த ஆய்வை Stollznow என்ற நிறுவனம் நடத்தியிருந்தது. இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் புகைப்பழக்கத்தைக் கைவிடப்போவதாக மற்றையவர்களுக்குக் கூறியது தங்களுக்கு பயனுடையதாக அமைந்திருந்ததாக கூறியிருக்கிறார்கள். மற்றையவர்களுக்குக் கூறிவிட்டதனால் புகைபிடிக்கவேண்டுமென்ற தூண்டுதல் வந்தாலும் கூட அதை தடுக்கக் கூடியதாக இருந்தது என்பது இவர்களின் நம்பிக்கை.

சிலர் தொடர்ந்து புகைப்பதற்குக் காரணம் மன அழுத்தமே என்று Action On Smoking and Health Australia அமைப்பின் தலைவரான பேராசிரியர் மத்தியூபீற்றர்ஸ் கூறுகிறார்.

புகைத்தலைக் கைவிடப் போவதாக பகிரங்கமாகக் கூறுவதன் மூலம், அதுவும் குறிப்பாக குடும்ப உறுப்பினர்களுக்கும் நெருங்கிய உறவினர்கள் நண்பர்களுக்கும் கூறுவதன் மூலமே சம்பந்தப்பட்டவர் புகைப்பதற்கான வாய்ப்புகள் குறைகின்றன. மற்றையவர்களின் கண்ணில் படாமல் புகைப்பதென்பது நெடுகவும் சாத்தியமில்லை. புகைத்தலைக் கைவிடுவது என்ற சிந்தனையைக் கைவிடாதிருப்பது மிகவும் முக்கியமானதாகும் என்றும் பேராசிரியர் மத்தியூபீற்றர்ஸ் கூறுகிறார்.



## 'கல்யாணமாகும் வரை கன்னிகளாக இருக்கவேண்டும்'

பெண்கள் திருமணமாகும் வரை கன்னிகளாக இருப்பது அவசியம் என்று அவுஸ்திரேலிய அரசியல் வாதியொருவர் கூறியிருக்கிறார். தன்னுடன் பல்கலைக்கழகத்தில் படித்த நண்பியொருத்திக்குப் பிறந்த ஆண்பிள்ளைக்கு தானே தந்தை என்று கடந்த 25 வருட காலமாக நம்பிக்கொண்டிருந்தவர் இவர்.

அவுஸ்திரேலியாவின் "womens Weekly' சஞ்சிகையில் பிரசுரிக்கப்படவிருக்கும் பேட்டியொன்றில் இதைக் கூறியிருப்பவர் ரொனி அபொட் என்ற சிட்னி எம்.பி.யாவார். லிபரல் கட்சி தலைவரான அவர் திருமணத்துக்கு முன்னரான பாலியல் உறவு என்று வரும் போது ஆண்களும் பெண்களும் 'சில விதிகளுக்கு' கட்டுப்பட்டவர்களாக நடந்து கொள்ளவேண்டுமென்றும் அவ்வாறு முடியாவிட்டால் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்.

இதை The Australian பத்திரிகைச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

'உங்களது புதல்விகள் திருமணமாகும் வரை கன்னிகளாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா' என்று அபொட்டிடம் பேட்டியின் போது கேட்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அவர் 'சகல பெண்களும் தங்களது கன்னித் தன்மையை ஒரு கொடையாகக் கருதவேண்டும். அது விடயத்தில் அலட்சியப் போக்கைக் கடைப்பிடித்தலாகாது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

தனது பல்கலைக்கழகக் காதலியின் மகனுக்கு தானே தந்தையென்று 25 வருடங்களாக அபொட் நினைத்துக் கொண்டிருந்தார். திருமணத்துக்கு முன்னரான பாலுறவு என்று வரும் போது அதைத் தவிர்க்கும் விடயத்தில் தான் ஒரு முன்மாதிரியானவர் என்றும் முன்னர் கூறிப் பெருமைப்பட்டவராம் இவர்.

காதலிக்குப் பிறந்த ஆண் பிள்ளைக்குத் தந்தை இவரல்ல, வேறு ஒருவர் என்று பின்னர் தெரியலந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நொதேர்ண் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ். வீதி, 336ஆம் இலக்கத்தில் 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.